இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 207 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 25 – வெள்ளிக்கிழமை 08 மார்ச் 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 207 : Thiruvalluvar Year - 2055 - Maasi 25 - Friday 08 March 2024 - Chennai 20 Pages ₹ 5.00

# இனமானப் பேராசிரியர் 4ஆம் ஆண்டு நினைவுநாள்: தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை !




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முன்னாள் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## “பேராசிரியர் என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார் ! அவர் தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழி நடத்தும் !”

### நினைவு நாளில் பேராசிரியருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, மார்ச் 8–**

**இனமானப் பேராசிரியர் அவர்களின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று (7.3.2024) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், “பேராசிரியர் என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார் எனவும், அவர் தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழி நடத்தும்” என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இனமானப் பேராசிரியர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**குலையா உறுதி, அசையாக் கொள்கை, தாழா மானம், மங்கா உணர்வு, மாறா நட்பு, மறையாப் புகழ் என இனி வரும் இயக்கத்து இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த இனமானப் பேராசிரியர் நினைவுநாள்!**

**கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. காலம் முதல் பொதுக்குழுவில் என்னைக் கழகத் தலைவராக அறிவித்தது வரை என் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அவர் நிறைந்திருக்கிறார். என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார்! அவர்தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழிநடத்தும்!**

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

## பெரியார் - அண்ணா - கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசு

# பெண்களின் சமூக மேம்பாட்டை உறுதி செய்ய தீட்டி வரும் உன்னதத் திட்டங்கள்!

## உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 8–**

**உலக மகளிர் தினத்தையொட்டி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது வழியில் செயல்படும் எனது தலைமையிலான திராவிட மாடல் அரசிலும், பெண்களின் சமூக பொருளாதார விடுதலையை, மேம்பாட்டை உறுதி செய்வதற்கான பல உன்னதத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்” என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

மகளிருக்கான உரிமையை நிலைநாட்டியதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு, நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது.

திராவிட இயக்கத்தின் அறிவாசான், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பெண்கள் முன்னேற்றத்திற்கு அண்ணா – கலைஞர் தீட்டிய திட்டங்கள்!

அவர் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், சுயமரியாதைத் திருமணத்திற்கு அங்கீகாரமளிக்கும் சட்டத்தை அவர் நிறைவேற்றினார்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர் முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்குவதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்.

அதுமட்டுமின்றி, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு கைம்பெண் மகளிர் மறுமண நிதி உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம், கைம்பெண்களுக்கும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முதியோர் உதவித் தொகை, 50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் ஏழைப் பெண்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம், மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், பெண்களே நடத்தும் நியாய விலைக் கடைகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், இந்தியாவிலேயே முதல் முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாட்டில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு, இந்தியாவிலேயே முதல் முறையாக 1973இல் காவல்துறையில் மகளிர் நியமனம் என்று கலைஞரின் ஆட்சிக் காலங்களில் மகளிரை மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் பட்டியல் மிக நீளமானவை.

### பெண்களின் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும் விடியல் பயணத் திட்டம்!

இவற்றின் நீட்சியாகவும், விரிவாக்கமாகவும் உங்களில் ஒருவனான எனது தலைமையில் தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியிலும் பெண்களின் சமூக பொருளாதார விடுதலையை, மேம்பாட்டை உறுதி செய்வதற்கான பல உன்னதத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதும், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் விடியல் பயணத் திட்டத்திற்காகத்தான் எனது முதல் கையொப்பத்தை இட்டேன். உலகின் முன்னேறிய நாடுகளில் கூட இல்லாத வகையில், மகளிருக்கான ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பை 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தினோம். அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 40 விழுக்காட்டுக்கு உயர்த்தி எல்லா அலுவலகங்களிலும் ஆண்களுக்குச் சமமாகவும், ஆண்களை மிஞ்சியும் மகளிர் பணிபுரியும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

## மகளிருக்கான உரிமைகளை நிலைநாட்டியதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு நீண்ட வரலாறு கொண்டது!



மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாரின் பெயரால் பெண்கள் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்யும் ‘புதுமைப் பெண்’ திட்டத்தையும் தொடங்கி, கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கி வருகிறோம். அதுமட்டுமின்றி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வீடுகள் குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே வழங்கப்படும் என்ற அக்கறைமிகு அறிவிப்பினையும் வெளியிட்டோம்.

### பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரும் கழக அரசு!

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களையும், நகைக்கடன்களையும் தள்ளுபடி செய்து சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம்.

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பெண்களுக்கு 50 விழுக்காடு வேலைவாய்ப்பு அளிப்பதை நடைமுறைப்படுத்தியுள்ளோம். புதிய சிப்காட் தொழிற்பேட்டைகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பெரிய மாநகராட்சிகள் உள்ளிட்ட 11 மாநகராட்சிகளைப் (50 விழுக்காட்டுக்கும் மேலாக) பெண்களுக்கு ஒதுக்கி, அவர்கள் இன்று வணக்கத்துக்குரிய மேயர்களாகச் செயலாற்றும் நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படுத்தி இருக்கிறது. மற்ற உள்ளாட்சி அமைப்புகளிலும், ஒதுக்கப்பட்ட 50 விழுக்காட்டுக்கும் மேல் பெண்கள் தலைவர்களாகவும், துணைத் தலைவர்களாகவும், கவுன்சிலர்களாகவும் பொறுப்பேற்றுள்ளனர் என்பது இதுவரை இல்லாத சாதனை ஆகும்.

### தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை வெளியீடு!

இத்துடன், இந்த ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024”ஐ வெளியிட்டோம்.

> **“பெண் விடுதலை என்பதே முழுமையான சமூக விடுதலை என்ற முழுமையான புரிதலுடன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், நமது திராவிட மாடல் அரசு, பெண்கள் உரிமை மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. சமூகத்தின் சரிபாதியான பெண்கள் அவர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும், நலன்களையும் முழுமையாகப் பெறும் வரை அதை நோக்கிய நமது பயணம் தொடரும் என்ற உறுதியுடன் பெண்கள் அனைவருக்கும் மகளிர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”**

- அதில், பாலின உணர்திறன் கொண்ட கல்வி முறையை நிறுவுதல் மற்றும் பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல்.
- வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.
- வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.
- அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல்.
- பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.
- பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்.
- தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல்.
- நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.
- மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல்.

ஆகிய கோட்பாடுகளை இலக்காக வைத்துச் செயல்படத் திராவிட மாடல் அரசு தீர்மானித்துள்ளது.

### பெண்களின் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் திராவிட மாடல் அரசு!

பெண் விடுதலை என்பதே முழுமையான சமூக விடுதலை என்ற முழுமையான புரிதலுடன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், நமது திராவிட மாடல் அரசு, பெண்கள் உரிமை மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. சமூகத்தின் சரிபாதியான பெண்கள் அவர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும், நலன்களையும் முழுமையாகப் பெறும் வரை அதை நோக்கிய நமது பயணம் தொடரும் என்ற உறுதியுடன் பெண்கள் அனைவருக்கும் மகளிர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 08-03-2024

# போதையின் தலைநகர் குஜராத்

போதைப் பொருள் தடுப்பு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவர் கட்சியில் இருந்தார். இதனை அறிந்ததும் அவர் நீக்கப்பட்டு விட்டார். தவறான நபர் என்று புகார் வந்ததும் அவரைக் கட்சியை விட்டு நீக்குவதற்கு தி.மு.க. தயங்கவில்லை. உடனே, தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாகி விட்டதாக பொய்ப் புகார்களைக் கிளப்புகிறார்கள். இதையே பிரதமர் மோடியும் சொல்லி இருக்கிறார்.

“ஆட்சியில் இருக்கும் கட்சியின் ஆதரவில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இது என் மனதை வருத்தமடையச் செய்துள்ளது. போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மீது பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும் என்பதே மோடியின் உத்தரவாதம்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

**நாட்டிலேயே அதிகமான போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்தான் என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இது இருக்கிறது.** இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.

★ **ராஜஸ்தான்**
★ **பஞ்சாப்**
★ **மத்தியப்பிரதேசம்**
★ **ஜார்கண்ட்**
★ **மணிப்பூர்**
★ **குஜராத்**
★ **அரியானா**
★ **பீகார்**
★ **மேற்கு வங்கம்**
★ **உத்திரப்பிரதேசம்** - ஆகிய பத்து மாநிலங்களில்தான் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும், ஆளும் கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். பிரதமர் மோடியின் உத்தரவாதம் ஏன் அங்கு செயல்படுத்தப்படவில்லை?

அந்த மாநிலத்தில் போய் போதை மருந்து ஒழிப்பு பற்றி பேசுகிறாரா பிரதமர்?

**போதை மருந்துக்கு தலைநகரே குஜராத் மாநிலம்தான்.**

**இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக இருப்பது குஜராத் மாநிலம்தான். கடந்த 1ஆம் தேதியன்று குஜராத்தில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிறிய வகை கப்பலில் கொண்டு வந்துள்ளார்கள். 3,300 கிலோ எடை கொண்ட போதைப் பொருட்கள் இவை. ஐந்து பேரைக் கைது செய்தது காவல் துறை. இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து போதைப் பொருள் விற்கும் அளவுக்கு ‘பாதுகாப்பான’ மாநிலமாக குஜராத் இருக்கிறது.**

கடந்த செப்டம்பர் மாதம் குஜராத் மாநிலம், ராஜ்கோட் நகருக்கு அருகில் உள்ள மிதி ரோகர் என்ற கிராமத்தில் ஒரு கிலோ எடையில் 80 பாக்கெட்டுகள் கிடந்தன. பொதுமக்கள் பார்த்து போலீஸுக்கு சொன்னார்கள். 2022, 23 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்து ரூ.4 ஆயிரம் கோடிக்கும் அதிகமான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்திருப்பதாக அந்த மாநில அரசே சொல்லி இருக்கிறது. பறிமுதல் செய்யப்பட்டதே இவ்வளவு என்றால் - புழக்கத்தில் விடப்பட்டது எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இருக்கும்?

2017 - 21 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் குஜராத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது. குஜராத் உள்துறை அமைச்சர் ஹார்ஸ் சங்வி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 3 போதை மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டது. போதை மருந்துகள் அதிகம் வந்து இறங்குவது முந்த்ரா துறைமுகத்தில் என்று செய்திகள் வருகின்றன.

குஜராத் மாநில கடற்பகுதியில், ஒரு கப்பலில் இருந்து 1,500 கிலோ ஹெராயினை இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஒரு வணிக கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த ஹெராயினின் மதிப்பு கிட்டத்தட்ட 550 மில்லியன் டாலர் இருக்கும் என கடலோரக் காவல்படை அறிக்கையே வெளியிட்டது. **“இவ்வளவு போதைப் பொருள்கள் ஒரே நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை”** என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் டி.கே.சர்மா சொன்னார்.

ஹெராயினின் முக்கிய மூலப்பொருளாக ஓபியம் உள்ளது. **உலகின் மிகப்பெரிய ஓபியம் உற்பத்தியாளர்களால் ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் குஜராத் வழியாக வருகிறது. ஆப்கானிஸ்தானில் தயாராகும் ஹெராயின்கள், இந்தியப் பெருங்கடல் வழியாக கிழக்கு மற்றும் தெற்கு ஆப்ரிக்காவுக்குக் கடத்தப்படுவதாக ஐ.நா.வின் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் கூறுகிறது.** வட மாநிலமான பஞ்சாப், ஹெராயினால் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள முந்திரா துறைமுகத்துக்கு ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் வந்து இறங்கியது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகப்பெரிய போதைப் புதையலை குஜராத் காவல்துறையினர் பிடித்தார்கள். அவர்கள் நடத்திய சோதனையில் குஜராத் கடற்கரைக்கு அருகே கடத்தல் படகு பிடிபட்டது. அதில், சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா, மெத்தாம்பிடமைன் மற்றும் ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் 760 கிலோ கண்டுபிடிக்கப்பட்டன. இதன் சர்வதேச மார்க்கெட் விலை ரூ.2,000 கோடி. அண்டை நாட்டில் இருந்து செயல்படும் போதை கடத்தல் கும்பல், இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு கடல் மார்க்கமாக போதைப் பொருட்களை சப்ளை செய்து வருகின்றன என்று அறியப்பட்டது.

சமீப காலமாக குஜராத் துறைமுகங்களைப் பயன்படுத்தி போதைப் பொருள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்; **“குஜராத்தில் பல கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் அங்கு தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன, கண்மூடித்தனமாக போதைப்பொருள் வியாபாரம் செய்யும் இவர்கள் யார்? இந்த மாபியாக்களுக்கு எந்த ஆளும் சக்திகள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள்?”** என அப்போதே கேள்வி எழுப்பினார். ஆனால் பதில் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை!

**இப்படிப்பட்ட செய்திகளை மறந்து விட்டுத்தான் பிரதமர் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். குஜராத் முந்திரா துறைமுகத் தகவல்கள் ஏன் அவரை வருத்தமடைய வைக்கவில்லை?**

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி விஜிலா சத்தியானந்த், துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள போதகர் ஆர். தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஐ. ரோஸ்லின் ஜீவா, ஜான் பிரகாஷ் எபினேசன், எம். சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி. மோகன்தாஸ், போதகர் டி. சோபித்தராஜ், சி. ஜெபநேசர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.

## இலக்கியத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றி வரும்

# பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு ஔவையார் விருது அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 8-*

*சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் திருமிகு பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களுக்கு 2024-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பெண்களுக்காக கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கான சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிருவாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 2012 ஆம் ஆண்டு முதல்*

*தமிழ்நாடு அரசால் “ஔவையார் விருது” வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான*



*காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.*

*அவ்வகையில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் 2024-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும், முன்னணி எழுத்தாளரான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமிகு. பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை தனது வாழ்வனுபவங்களின் மூலம் அதன் தகிக்கும் அனலோடு தமிழிலக்கிய படைப்புகளாகவும், சாதி மற்றும் பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையையும் அநீதிகளையும் எடுத்துக்காட்டும் தொகுப்புகளாகவும் எழுதியுள்ளார். இவரது நூல்களான கருக்கு, சங்கதி, வன்மம், மனுசி போன்ற நாவல்களும், கிசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் போன்ற சிறுகதை தொகுப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவர் எழுதிய “கருக்கு” என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000-ஆம் ஆண்டின் ‘கிராஸ் வேர்ட்புக்’ விருதை பெற்றுள்ளது.*

## போதைப் பொருட்கள் எங்கிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்றன?

# பிரதமரே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆதாரப்பூர்வமான பதிலடி!



*சென்னை, மார்ச் 8-*

*தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள்கள் கடத்தல் அதிகம் என்று சென்னையில் பிரதமர் மோடி பேசியுள்ளார். தமிழ்நாட்டிற்கு இவை எங்கிருந்து வருகின்றன? மாநிலங்களவையில் உள்துறை அமைச்சகம் அளித்த போதைப் பொருள் அதிகமாகக் கடத்தும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இல்லையே! போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் வருகின்றது. உண்மை இவ்வாறு இருக்க, பிரதமர் உண்மைக்கு மாறாகப் பேசலாமா? பிரதமர் மோடி அவர்களே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*4-3-2024 அன்று சென்னையில் தரம் தாழ்ந்து பேசிய பிரதமர் மோடி,*

*“தி.மு.க. அரசின் ஆதரவால்தான் தமிழகத்தில் போதைப் பொருள்கள் வியாபாரம் செழித்து வருகிறது.*

*என் மனதை அரிக்கும் கவலையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழகத்தைச் சேர்ந்த பெற்றோர் மனதிலும் ஆழ்ந்த கவலை உள்ளது.*

*ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் ஆதரவில், தமிழகத்தில் போதைப் பொருள்கள் தடையின்றி, அனைத்து இடங்களிலும் புழங்கி வருகிறது என்பதுதான் என் மனதை உருக்கும் கவலை.... இது அபாயத்தின் அறிகுறி, தமிழகத்தின் எதிரிகள்மீதான நடவடிக்கை, மேலும் விரைவுபடுத்தப்படும்.*

*இது மோடி அளிக்கும் “கியாரண்டீ”*

**போதைப் பொருள்கள் எங்கிருந்து வந்தன?**

*நன்றி! பிரதமர் மோடி அவர்களே, இந்தக் கொடுமையான போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிற்கு எங்கிருந்து வந்தன - வருகின்றன என்பதை அறிந்துகொள்ள, அனைத்து மாநிலங்களையும் ஆளும் பிரதமர், உள்துறை அமைச்சர் போன்ற ஒன்றியப் பொறுப்பிலிருக்கும் உங்களைப் போன்ற “மனதை உருக்கும் கவலை” - எங்களுக்கும், தமிழ்நாட்டவருக்கும் இருப்பதால் பதில் கூறுங்கள்.*

*விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்களில் யாருடைய அதிகாரங்கள் உள்ளன என்றாலும், போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா? தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றனவா? வெளிநாட்டு, பன்னாட்டு மாஃபியாக்கள் மூலம்தானே கோடி கோடியாக உள்ளே நுழைகின்றன!*

*பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் தங்களது “டபுள் எஞ்ஜின்” நிர்வாகம் நடத்தும் குஜராத்திலிருந்துதான் இந்திய நாட்டின் மாநிலங்களுக்குள் நுழைந்து மக்களை சீரழிக்கின்றன என்ற தகவல்கள் பொய்யா, மெய்யா?*

**உள்துறை அமைச்சகம் ஒப்புக்கொண்ட உண்மைகள்!**

*1.2023 டிசம்பர் 13 அன்று மாநிலங்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், உத்தரப்பிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்கள் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதில் முதன்மை இடத்தில் உள்ளன. இந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் போதைப் பொருள் புழக்கம் குறைவானதே! என்றாலும், அதை ஒழிக்கத் தமிழ்நாடு தி.மு.க. அரசு இடையறாத முயற்சியை மேற்கொள்ளத் தவறியது உண்டா?*

*பெரிதும் போதைப் பொருள்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுவது குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் வழியாகத்தான் என்று ஊடகங்களில் வந்த செய்தித் தொகுப்புகள் - தரவுகள் அருகில் தரப்பட்டுள்ளன. குஜராத் முந்த்ரா துறைமுகம் யாருடையது?*

*இந்தியாவின் “பிரபல ஏழையான” அதானியின் துறைமுகம்!*

*அந்த அதானி யார்? நம்முடைய பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமானவர்; அவருடன் சேர்ந்து அவரது விமானத்திலே செல்லும் அரிய வாய்ப்புப் பெற்றவர்!*

*‘நடவடிக்கை’ எடுக்கவில்லையா? நாங்கள், எடுத்தது செய்திதானே என்று பதில் கூறலாம்!*

*அதே பதில் உங்களுக்கு மட்டும்தானா?*

**அரசு ஆக்கிரமிப்பாக செயல்படவில்லையா?**

*தமிழ்நாட்டில் தி.மு.க. அரசும், முதலமைச்சரும், காவல்துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லையே! இது பற்றி தமிழ்நாடு (தி.மு.க.) அரசின் சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் தெளிவான விளக்கம் தந்துள்ளாரே!*

*“1. போதைப் பொருள்களைத் தடுப்பதற்காக 10.8.2023 அன்று மாநில அளவிலான காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, இத்தகைய போதைப் பொருள்கள் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்பதற்கான நடவடிக்கையை முதலமைச்சர் எடுத்தார்.*

*2. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர்மீதும், மற்ற அதிகாரிகள் மீதும் வழக்குத் தொடருவதற்கான கோப்பு நீண்ட நாள் தமிழ்நாடு ஆளுநரிடம் இருந்தது - பிறகு, அவர் (சில காலம் முன்புதான்) வழக்குத் தொடர அனுமதி அளித்துள்ளார்! அதுமட்டுமா?*

**கஞ்சா கடத்தியவர்களை வரவேற்பது பா.ஜ.க.தானே!**

*தி.மு.க.வில் இருந்த ஒருவர் சம்பந்தப்பட்டதாக விசாரணை நடப்பதாலேயே அக்கட்சிமீது பழி சுமத்தி விடுவது நியாயமா? அவரை உடனே கட்சியிலிருந்து விலக்கி, நடவடிக்கை எடுக்க தி.மு.க. தலைமை தயங்கவில்லையே!*

*தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப் பொருள் விற்பனைத் தொழில்களில் ஈடுபட்டவர்களை சிவப்புக் கம்பளம் விரித்து, பா.ஜ.க. தனது கட்சியில் சேர்த்துக்கொண்டது.*

*இப்படி தி.மு.க.மீது பழி போட்டு, தேர்தல் வாக்குகளை வாங்க குறுக்குவழி தேடலாமா?*

*தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி உடைந்தது மட்டுமல்லாமல், புதிதாக எவரும் அக்கூட்டணிக்கு வரவும் தயாராக இல்லை; பிரதமர் மோடி நான்கு முறை தமிழ்நாட்டிற்கு வந்தும் இந்நிலையே என்கிற கோபத்தாலும், தேர்தல் தோல்வி என்ற பயத்தாலும் இப்படி ஜன்னி கண்டவர் போல் பிதற்றுவது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகா? யோசிக்கவேண்டும்!*

**உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!**

*தனது குஜராத் நடப்புகளை மறந்துவிட்டு, இப்படி தமிழ்நாட்டைப் பார்க்கிற பிரதமர் மோடியிடம், “மருத்துவரே உங்கள் நோயை முதலில் குணப்படுத்திக் கொள்ளுங்கள்” என்றுதான் தமிழ்நாட்டினர் கூறுவர்.*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளார்.*



சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, டி. என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் 2015 ஆண்டிற்கான சிறந்த படங்கள், சிறந்த நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகள் மற்றும் தங்க பதக்கங்களை விருதாளர்களுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றஉறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கொளத்தூரில் ரூ.36.99 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு!

# ரூ.205 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அடிக்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று நல உதவிகள் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 8 -**

**கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ரூ.36.99 கோடி செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.205.40 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மாணவ, மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2024) கொளத்தூர், மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 10.13 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற

15 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 28.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், உழவர் சந்தை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீர்வள ஆதாரத் துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் 26.86 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 2 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 176.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்ப ணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகள்

மேயர் சிட்டிபாபு மேம்பாலம் அருகில் 1.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு மைதானம், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ஜி.கே.எம். காலனி, 34ஆவது தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் 45 இலட்சம் ரூபாய் செலவில் நீத்தார் நினைவு மண்டபம் மற்றும் 35 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம், பள்ளி சாலையில் 34.90 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்குக் கட்டடம், பல்லவன் சாலையில் 35 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்குக் கட்டடம், ஜவஹர் நகர் 2ஆவது குறுக்குத் தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் மேசை விளையாட்டுக் கூடம் (Table Tennis Hall);

கொளத்தூர் 200 அடி உள்வட்டச் சாலையில் 94.40 இலட்சம் ரூபாய் செலவில் 150 வாட்ஸ் திறன் கொண்ட 88 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், சீனிவாசன் நகர்6ஆவது தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட குளம் மற்றும் நடைபாதை, வெற்றி நகர், கண்ணியப்பன் தெருவில் 34.80 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புர நலவாழ்வு மையம் (Health and Wellness Centre), பல்லவன் சாலையில்

24.43 இலட்சம் ரூபாய் செலவில் திறந்தவெளி உடற்பயிற்சிக்கூடம், கோவில் சாலை முதல் குறுக்குத் தெருவில் 7.05 இலட்சம் ரூபாய் செலவில் இசேவை மையக் கட்டடம், சோமையா ராஜா தெரு சென்னை உயர்நிலைப் பள்ளியில் 9 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர்கள் உணவருந்தும் கூடம், ஜெகநாதன் சாலையில் 33.56 இலட்சம் ரூபாய் செலவில் உதவி செயற்பொறியாளர் (பகுதி15) அலுவலகக் கட்டடம், பந்தர் கார்டன் சென்னை பள்ளியில் 4.37 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட 5 பள்ளிக் கட்டடங்கள்;

என மொத்தம் 10.13 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 15 திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

திரு.வி.க.நகர் மண்டலம், கொளத்தூர், வார்டு64 முதல் 70 வரையுள்ள பகுதிகளில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 மீ. உயரம் கொண்ட 10 உயர்கோபுர மின்விளக்குகள், நேர்மை நகர் மயானபூமியில் 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக எரிமேடை, ஜெகநாதன் தெரு பல்நோக்குக் கட்டடத்தில் 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக முதல் தளக் கட்டடம்;

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், முத்துகுமாரப்பா சாலையில் 13.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய சமுதாய நலக்கூடம், அமிர்தம்மாள் காலனியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூப்பந்தாட்ட மைதானம், லோகோ ஒர்க்ஸ் சாலையில் 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை உள்விளையாட்டு அரங்கம்;

மூலதன நிதியின் கீழ், ரங்கசாயி தெருவில் பழுதடைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தை இடித்துவிட்டு 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 10 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம், சோமையா ராஜா தெருவில் பழுதடைந்துள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டடத்தை இடித்துவிட்டு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 10 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம்;

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், மாதவரம் நெடுஞ்சாலை, இலட்சுமி அம்மன் கோவில் தெரு சந்திப்பில் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன கட்டமைப்புகளுடன் புனரமைக்கப்படவுள்ள பேருந்து நிழற்குடை;

கபிலர் தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிழக்குப் பகுதி கட்டடத்தினை புனரமைத்தல், கபிலர் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில்

4.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்துள்ள கட்டடத்தினை இடித்துவிட்டு தரை, முதல் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய 21 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் கட்டும் பணி;

என மொத்தம் 28.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள உழவர் சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்

நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் 7.30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட கொளத்தூர் ஏரி;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் வீனஸ் நகர் பகுதியில் 19.56 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையம்;

என மொத்தம் 26.86 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 2 திட்டப்ப ணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 55 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேப்பர் மில்ஸ் சாலையில் அமைக்கப்படவுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன சந்தை, கொளத்தூர், ஜெகன்நாதன் சாலையில் மாற்றுத்திறனாளிக்கான மறுவாழ்வு மையம் மற்றும் நவீன ஆய்வகம், பெரியார் நகர் பேருந்து நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக மேம்படுத்துதல்;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் சிவானந்த நகரில் உள்ள தெருக்களுக்கு 6.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் பெரியார் நகர், பணிமனை 65 மற்றும் 68ல் 44.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் கட்டமைப்புகள்;

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 200 அடி சென்னை உள்வட்டச் சாலை, செந்தில் நகர் சந்திப்பில் 15.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகரும் படிக்கட்டுடன் கூடிய நடைபாதை மேம்பாலம்;

பொதுப்பணித்துறையின் சார்பில் பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் தற்போது பணி நடைபெற்று வரும் கட்டடத்தில் 54.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 4, 5 மற்றும் 6ஆவது தளங்கள் கட்டும் பணி;

என மொத்தம் 176.90 கோடி ரூபய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, முத்து குமாரப்பா சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற 355 மாணவ, மாணவியருக்கு தையல் இயந்திரங்கள், 127 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள், 250 மாணவ, மாணவியருக்கு கல்லூரிக் கட்டணம் மற்றும் 750 பயனாளிகளுக்கு டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் சார்பில் மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், பணிகளை ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் .ககன்தீப் சிங் பேடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2024) கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள உழவர் சந்தை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிர்வளத்துறை அமைச்சர். துரைமுருகன், அமைச்சர்கள் கே.என். நேரு, தங்கம் தென்னரசு, பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2024

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் தந்துள்ளவர்களை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகிற 10-3- 2024, ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்.

இந்நேர்காணலின்போது, அந்தந்த நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும்.

வேட்புமனு அளித்தவர்கள், தங்களுக்கான ஆதரவாளர்களை யோ பரிந்துரையாளர் களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையெல்லாம் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## அமலாக்கத்துறை தொடர்ந்து அனுப்புகிறது!

# பா.ஜ.க.,வில் இணைந்தால் சம்மன் நிறுத்தப்படும் !

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 8–

பா.ஜ.க.,வில் தாம் இணைந்து விட்டால் அமலாக்கத்துறையில் இருந்து தமக்கு அனுப்பப்படும் சம்மன் உடனே நிறுத்தப்பட்டு விடும் என்று ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதலமைச்சரு மான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரவிந்த் கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள சமூகவலைத் தளப் பதிவில்,

அமலாக்கத்துறை மூலம் துன்பப்படுத்தப் பட்டு பலர் பா.ஜ.க.,வுக்கு இழுக்கப்படுகிறார்கள் என்று கண்டனம் தெரிவித்துள்ளார். அமலாக்கத்துறையின் சோதனைக்கு பிறகு நடத்தப்படும் விசாரணையின்போது, சம்பந்தப்பட்டவரிடம் கேட்கப்படும் முதல் கேள்வி என்னவென்றால், நீங்கள் எங்கு செல்ல போகிறீர்கள் என்பதுதான். அதாவது, நீங்கள் பா.ஜ.க.,வுக்குச் செல்ல போகிறீர்களா அல்லது சிறைக்கு செல்ல போகிறீர்களா என்பதுதான் அந்த கேள்வி என்று அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.,வில் இணைவதாக அவர்கள் தெரிவித்துவிட்டால் உடனே வழக்கிலிருந்துவிடுவிக்கப் படுவார்கள் என்றும், ஒருவேளை பா.ஜ.க.,வில் இணைய மாட்டோம் என்று தெரிவித்துவிட்டால் சிறைக்கு அனுப்பப் படுவார்கள் என்றும் தெரிவித்துள் ளார். குற்றம் செய்தவர்கள்தான் பா.ஜ.க.,வுக்கு செல்வார்களே தவிர, குற்றம் செய்யாதவர்கள் அல்ல என்று அவர் குறிப்பிட்டுள் ளார். சிறையில் இருக்கும் தமது கட்சியைச் சேர்ந்த மணிஷ் சிசோடியா, சத்யேந்தர் சிங் ஜெயின் உள்ளிட்டோர் பா.ஜ.க.,வில் இணைவதாக அறிவித்துவிட்டால் இன்



றைக்கே அவர்கள் சிறையிலி ருந்து விடுவிக்கப்படு வார்கள் என்று அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சித்து ள்ளார். எந்த குற்றமும் செய்யாமலும், பா.ஜ.க., வில் இணையாமலும் உள்ளதால்தான் அவர்கள் தற்போது வரை சிறையில் இருக்கிறா ர்கள் என்றும் பதிவிட்டுள்ளார். தாம் கூட பா.ஜ.க.,வில் இணை வதாக அறிவித்தால், தமக்கு அனுப்பப்படும் அமலாக்கத்துறையின் சம்மன் உடனே நிறுத்தப்படும் என்றும் கெஜ்ரிவால் விமர்சித்துள்ளார். ஆனால், அது ஒருபோதும் நடக்காது என்றும் கெஜ்ரிவால் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள மற்றொரு சமூக வலைத்தளப் பதிவில்,

திரிணாமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. டப்பாஸ் ராய் வீட்டில் ஜனவரி மாதம் அமலாக்கத்துறை ரெய்டு நடத்தியதாகவும், மார்ச் மாதத்தில் அவர் பா.ஜ.க.,வில் இணைந்தவுடன் அவர் மீதான விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதிலிருந்தே சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை பா.ஜ.க., எப்படி தவறாக பயன்படுத்துகிறது என்பது நன்கு தெரிகிறது என்று அரவிந்த் கெஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்

### டெல்லியில் விவசாயி சுட்டுக்கொலை: நீதி விசாரணை!

புதுடெல்லி, மார்ச் 8 -

டெல்லி முற்றுகை போராட்டம் நடத்திய விவசாயி சுபகரன்சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹரியானா பஞ்சாப் எல்லையில் உள்ள கானவுரியில் கடந்த 21ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது ஹரியானா காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுபகரன் சிங் என்ற 21 வயது விவசாயி கொல்லப்பட்டார். விவசாயி மரணமடைந்த விவகாரத்தில் பஞ்சாப் காவல்துறையினர் அண்மையில் கொலை வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், விவசாயி சுபகரன் சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த பஞ்சாப் ஹரியானா உயர்நீதிமன்றம், வழக்கு விசாரணையின்போது விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டதா? அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு என்ன மாதிரியான குண்டுகள் பயன்படுத்தப்பட்டன, வழக்குப்பதிவு செய்வதற்கு ஏன் காலதாமதம்? சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க தாமதமானது எதனால்? என்று ஹரியானா, பஞ்சாப் அரசுகளிடம் சரமாரியாக கேள்வி எழுப்பியது.

இதைத்தொடர்ந்து, விவசாயி சுபகரன் சிங் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் 3 நபர் குழு விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. பஞ்சாப், ஹரியானாவை சேர்ந்த ஏடிஜிபி பதவியில் உள்ள தலா ஒரு காவல் அதிகாரி குழுவில் இடம்பெற உத்தரவிட்டுள்ளது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே!: இந்தியாவில் கடந்த 9 ஆண்டுகளில் 24 கோடியே 82 லட்சம் பேரை வறுமையிலிருந்து மீட்டிருப்பதாகப் பிரதமர் மோடி மார் தட்டிக் கொண்டிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! : வரும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, பிரதமர் 'நாளொரு பொய், பொழுதொரு வேஷம்' என்று நாடகம் ஆடுகிறார் !**

**உண்மை நிலைமையைச் சொல்லப்போனால், இந்தியாவில் நாள் முழுவதும் உண்பதற்கு எதுவும் இன்றி வறப்பட்டினியாக 67 லட்சம் பச்சிளம் குழந்தைகள் இருப்பதாகச் சர்வே தகவல் தெரிவிக்கிறது.**

**பிரதமர் பேசுவது, " சீனி சர்க்கரை சித்தப்பா; ஏட்டில் எழுதி நக்கப்பா " என்பதைப் போல அல்லவா இருக்கிறது !**





மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா சென்னை கிழக்கு மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் 58 அ வட்டத்தில் சூரிய சுடர் 51 ஒருவருக்கொருவர் அருள் செய்வோம் உடன்பிறப்புகள் துணை நிற்போம் நிகழ்ச்சியில் 271 பாதிரியார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று (7.3.2024) சி.எஸ்.ஐ செயின் பால் சர்ச் கூளையில் நடைபெற்றது. அமைச்சர் பி.கே சேகர்பாபு முன்னிலை வகித்தார். மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் ஜெ.பால்மோகன் தலைமை வகித்தார். பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் 271 பாதிரியார்களுக்கு நல உதவிகள் வழங்கினார். இதில், மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொவேலு, லோகேஷ், கே.எஸ்.எம் நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், எஸ் ரசூல் ,டிவி வேலு, எம் மலர்மாறன் ,கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், தில்லை. கருணாகரன் .சூளை சுப்பராயன் நந்தீஸ்வரன் வி விஜயகுமார் எஸ் டால்பினரி ,இ மொய்தீன்,வான்மதி கதிரவன. தீனதயாளன் அபாய். மனோகர். பாலு. ரங்கநாதன். சேகர். எம்பி குணசேகரன். களரி முத்து. மு ஜெயக்குமார் .மா வெற்றி வீரன். எல் ஐ சி டி கருணா .எம் முத்து. தங்கசெல்வம். ஆர்.பாபு (எ) சந்திரசேகர் நன்றி கூறினார்.

# இனமானப் பேராசிரியர் நினைவு வாழ்க!



குன்றமைந்த தடந்தோள்கள்! பரந்த மார்பு!
குவிந்துறைந்த பேரறிவின் படர்ந்த நெற்றி!
நின்றுயர்ந்த செம்மாப்பு! புரட்சிப் பாட்டு
நெருப்புமிழ்ந்த பாவேந்தன் நடைச்செ ருக்கு!
வென்றெழுந்த தமிழ்வீறு! வெளிச்சப் பார்வை!
வெற்றிலைவாய்ச் சிதறாத புன்சி ரிப்பே!
அன்றிருந்தார்! வாழ்கின்றார் இன்றும் நம்முள்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

முறுவல்பூத் தொளிர்கின்ற எழிலைப் பார்த்தும்
முழக்கமிட்டு வருகின்ற செயலைப் பார்த்தும்
நிறைதொண்ணூற் றாறுவய தான போதும்
நிமிர்ந்துவந்த பொலிவுகண்டும், இளமை என்ன
சிறைவைக்கப் பட்டதுவா? எனவி யந்தோம்!
சிந்திக்கப் பிறந்தமகன்! ஆன்றோ ருக்கும்
அறிவுப்பால் பொழிந்ததமிழ் அமுதக் கிண்ணம்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

கொட்டாவித் தமிழனைத்தன் விடியல் ஓசைக்
குரலாலே துயிலெழுப்பும் மேடைப் பேச்சு!
கட்டான காளையர்தம் கையில் ஏந்திக்
கலாச்சார யுத்தத்தில் குதிப்ப தற்குப்
பட்டாளப் படைக்கலன்கள் அவரின் சொற்கள்!
பாமரர்க்கும் கல்விஒளி பாய்ச்சி வைத்தே
அட்டியின்றி வரலாற்றில் நிலைத்த செம்மல்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

ஒப்புவமை இல்லாத உயர்பண் பாளர்!
ஒழுக்கநெறி நிறைந்தகுறட் சீலர்! நாட்டின்
தட்பவெப்ப சூழ்நிலைக்குத் தக்க வாறு
தமைமாற்றிக் கொள்ளாத கொள்கை வீரர்!
நட்பினுக்கோர் இலக்கணம்யார்? என்று கேட்டால்
நாடே"பே ராசிரியர்" எனமு ழங்கும்!
அப்பழக்கில் லாதபகுத் தறிவுச் செம்மல்!
ஐயாநம் அன்பழகர் நினைவு வாழ்க!

கொற்றவன்போல் நடந்துவரும் கம்பீ ரத்தில்
கோட்டிமயம் தோற்றுவிடும்! தனது தோளில்
பற்றியுள்ள துண்டைத்தோள் மாற்றிப் போடும்
பாவனையில் பறிபோகும் பார்ப்போர் உள்ளம்!
அற்றகுளத் தின்பறவைக் கூட்ட மெல்லாம்
அகன்றோடும்! மீண்டும்வரும்! எண்ப தாண்டாய்
உற்றதுணை யாய்கலைஞர் அருகில் வாழ்ந்த
உன்னதப்பே ராசிரியர் நினைவு வாழ்க!

சோகமுட்கள் வேலாகத் தைத்த போதும்
சுடர்முகத்தில் ஒளிகுறையாக் கலைஞர் நெஞ்சில்
வேகம்,விசை யாய்மிளிர்ந்த வெப்பம் ஆனார்!
விழுதுகளின் வேரானார்! வெயில்பட் டாலே
காகிதப்பூ நிறம்மாறும்! நிலைமா றாத
கழகத்தின் குறிஞ்சிப்பூ வானார்! எந்தச்
சாகசமும் அவர்முன்னே தோற்றுப் போகும்!
சாயாத இலட்சியத்தின் உருவம் ஆனார்!

பல்லக்குத் தூக்கிகளும், பாதம் தாங்கிப்
பதவிசுக மோகிகளும் பறந்த நாளில்
சொல்லுக்கும் செயலுக்கும் வடிவம் தந்தே
சோதனையில் கழகத்தை மீட்கும் போரில்
புல்லர்க்குப் புலியாகி எதிர்த்து நின்ற
போர்க்குணத்தை மறப்போமோ? கழகத் தோழர்
இல்லத்தில் உள்ளத்தில் நிறைந்து வாழும்
இனமீட்புத் தூதுவரின் நினைவு வாழ்க!

ஈன்றார்க்குப் புகழ்சேர்த்த பெரியார் பிள்ளை!
இயக்கத்தில் அண்ணாவின் இனிய தம்பி!
தோன்றாநல் துணையானார் "தளப தி"க்கே!
தொண்டர்நம் தாய்மொழிக்கே! எமக்கோ ஆசான்!
ஆன்றோர்தம் சிந்தையிலே அன்புத் தோழர்!
அரசியலில் மாற்றாரும் போற்றி நின்ற
சான்றாளர்! தலைவர்கலை ஞருக்கு "மூத்த
சகோதரர்" பே ராசிரியர் நினைவு வாழ்க!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**



பாலாகத் தேனாகப் பழச்சா றாகப்
பருகும்இள நீராகப் போர்க்க ளத்தின்
வேலாக வாளாக ஈட்டி யாக
விரைந்துவரும் துப்பாக்கித் தோட்டா வாக,
மாலாக வைக்காமல், மயக்கம் தீர்க்கும்
மருந்தாக அறிவுவிருந் தாக, ஞான
நூலாகப் பீடுநடை போட்ட, எங்கள்
"நோற்றவப்பே ராசிரியர்" நினைவு வாழ்க!!

இதுவரை ரூ.5 கோடியே 95 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வந்தது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசு கையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 95 லட்சத்து 90 ஆயிரம்.** இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/–** (இரண்டு லட்சம்) 07–03–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | இரா.தென்னவன், 21, கீழத் தெரு, நெடுவாக்கோட்டை, திருவாரூர்614 014. | 25,000/– |
| 2. | இரா.பாலு, எம்.ஜி.ஆர்.நகர், சோமூர் அஞ்சல், மண்மங்கலம், கரூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | எஸ். குணசேகரன், அக்ரகாரம் தெரு, மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம். | 25,000/– |
| 4. | ஒய்.பி.அசோக்குமார், ஏத்தாப்பூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம்– 636 117. | 25,000/– |
| 5. | ஆர். சின்னதுரை, கருந்தேவன்பாளையம், காடச்சநல்லூர், நாமக்கல்–638 008. | 25,000/– |
| 6. | எஸ்.சிலம்பரசன், சிக்களூர் கிராமம்அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி–636906. | 25,000/– |
| 7. | வே. வேடியப்பன், ஒட்டப்பட்டி கிராமம், காவேரிபட்டினம் வழி கிருஷ்ணகிரி | 25,000/– |
| 8. | மு.மாரியப்பன், காந்தி மாநகர், பீளமேடு, கோவை–641 004. | 25,000/ – |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

எஸ்.புகழேந்தி தலைமை ! வ.பெ.சுரேஷ் முன்னிலை !

# 52 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் !

இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை ! ஆர்.டி.சேகர், கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்பு !

*சென்னை மார்ச்:8*

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம் ( இன்று 08.03.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணியளவில் தாளமுத்து நடராஜன் நினைவு மன்றம், தொப்பை தெருவில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் எஸ்.புகழேந்தி தலைமை வகிக்கிறார்.இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ்,மு.கோபி, நா.செந்தில் குமார், இரா.செந்தில்குமார், எஸ்.கீதா சுரேஷ் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ்,கொரியர் பி.முருகன், இரா.பாலன், எம்.எல்.ரவி, ஜெ.கௌரீஸ்வரன், பாலா லட்சுமணன், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், பிரியாணி எம்.பாலா, ஆர்.டி. ஜெய்சங்கர், எஸ்.மொய்தீன், எ.அன்வர், எம்.பாலாஜி, ந. குமார், எஸ்.யுவராஜ், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி தலைவர் இரா. ராஜீவ்காந்தி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, தா.இளையஅருணா, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ,என்.நவீன், கழக பேச்சாளர் புலவர் செல்வராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் இரா.மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், இரா.கருணாநிதி, எஸ். ஆர்.கமலக்கண்ணன், நாகம்மை கருப்பையா, கீ.ராஜேந்தரன், ஜெ.கே.நாதன், ஆர்.வி.லட்சுமி வேலு, வெ.சு.சத்தியநாராயணன், ப.சோமசுந்தர மூர்த்தி, லயோலா கே.மதன், லியோ டி. சுரேஷ், க.கோவிந்தசாமி, எம். தீனதயாளன், பி.சதிஷ்குமார், கார்த்திக்செங்குட்வன், பா.வேளா ங்கண்ணி, கே.என். பார்த்திபன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள். எ.தனசேகர், ஐ.லூர்து மார்டின், எம்.ரீகார்த்திகேயன் நன்றி கூறுகிறார்கள்.

திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டச் செயலாளர் சுப்ரீத் (எ) சுப்பிரமணியன் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பா.தளவாய்** (49ஏ, பெருமாள் மேலரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் 33வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட கழக சார்பில் மார்ச் 1ல் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ். ஏற்பாட்டில் மேட்டுக்குப்பம் அரசு துவக்க பள்ளியில் 500–க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உணவினை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி வழங்கினர். உடன் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம்

# அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராம்பட்டினம் நகரம், அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட இவ்வொன்றியங்களில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள்** - *3, 4, 5,14, 15, 16, 21, 22, 23, 24, 25, 26, 27ஆகிய 13 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம்**

*பொறுப்பாளர் :* **இராம. குணசேகரன்**
*34/1, அண்ணா தெரு,*
*அதிராம்பட்டினம்,*
*தஞ்சை மாவட்டம்.*

*பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.பி.கோடி, மாரியம்மன்கோவில் தெரு, 2. இ.சரஸ்வதி, சுப்பிரமணியகோவில் தெரு, 3. டி.முத்துராமன், பழஞ்செட்டித் தெரு, 4. பி. காதர் இப்ராஹிம், ஆறுமுககிடங்கி தெரு, 5. பி.செய்யது முகம்மது, கடற்கரை தெரு.*

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள் -** *1, 2, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 17, 18, 19, 20 ஆகிய 14 வார்டுகள்*

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம்**

*பொறுப்பாளர் :* **எஸ்.எச். அஸ்லம்,**
*92ஏ, நடுத் தெரு, அதிராம்பட்டினம்,*
*தஞ்சை மாவட்டம்.*

*பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. என்.ஏ.முகம்மது யூசுப், மேலத் தெரு 2. சி. தில்லைநாதன், முத்தம்மாள் தெரு 3. ஏ.எம்.ஒய்.அன்சர்கான், புதுத் தெரு 4. திருமதி எஸ்.ரிபாயா, நடுத் தெரு 5.எம்.சேக்தாவூத், கீழத் தெரு.*

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

நாத்திகம் நாகராசன் வரவேற்புரை! கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# காஞ்சிபுரத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு நல உதவிகள்!

க.சுந்தர் எம்.எல்.ஏ.- க.செல்வம் எம்.பி.- சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ பங்கேற்பு

*காஞ்சிபுரம், மார்ச், 8*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கலைஞர்கள், தமிழறிஞர்கள், மொழிப் போர் தியாகிகளை பாராட்டி சான்றிதழ் வழங்கும் விழா 10.3.2024 அன்று காலை 9 மணிக்கு கலைஞர் பவளவிழா மாளிகை சின்ன காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

மாநகர செயலாளர் சி.கே.வி. காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் தமிழ்ச்செல்வன்,பி. எம்.குமார், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய செயலா ளர் பி.எம். பாபு, காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் க.குமணன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ. யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகர பகுதிச் செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தரசரதன்,சு.வெங்கடேசன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர்கலைச்செல்வி ஜெகநாதன்,துணைத் தலைவர் எம்.ஆர்.தனசேகரன், துணை அமைப்பாளர்கள்ஏ.சங்கர், வல்லரசுசெங்குட்டுவன், ஜெ.முல்லைவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந் நிகழ்ச்சியில் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், ச.இனியரசு, டி.வீ. கோகுலகண்ணன், மலர் விழிகுமார், சன்பிராண்ட்கே.ஆறுமுகம், இரா.நாகன்,டி.ஆர்.நாராயணன்,டாக்டர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி. சசிகுமார், எழிலரசிசுந்தரமூர்த்தி,வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த், எஸ். உசேன், எஸ்.கே.ராஜேந்திரன், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், கு.குமார், கெ.ஞானசே கரன், டி.குமார், பி.சேகர்,கே.கண்ணன், ஜி.தம்பு, பி.எச்.சத்தியசாய், பொன்.சிவக்குமார்,கே.எஸ்.ராமசந்திரன்,வி. ஏழுமலை,இ.சரவணன்,ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, என்.எஸ். பாரிவள்ளல், என்.பாண்டியன்,ஏ.சுந்தரமூர்த்தி, வி.டி.ஆர். வி. எழி லரசன், டி.மோகன்தாஸ், கே.ஏ. செங்குட்டுவன்,ஏ. எஸ்.முத்துச்செல்வன், வி. ஜெகன் நாதன், பி.நிர்மலா, கே.சப்பராயன், நித்யா சுகுமார், ஆர்.கே. தேவேந்திரன், மலர்கொடி குமார், செவிலிமேடு எஸ்.மோகன், சாந்தி சீனிவாசன், சசிகலா ஆறுமுகம்,ப.சுரேஷ், வ.கமலக்கண்ணன், சங்கர், சர்மிளா,ரா.கார்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.கலைமாமணி வை.ராசநிதி குழுவினரின் தலைவர் தளபதியை போற்றுவோம் எனும் கிராமிய இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. காஞ்சி உலக ஒளியின் எழுச்சிப்பாடல்கள்நடைபெறும்.

சு.முரளிதரன் நன்றி கூறுகிறார்.




*இம்மாபெரும் கூட்டத்தில் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன்,கழகப் பொருளாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர்,அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.*

*இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ,எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ,மேயர் க. வசந்தகுமாரி,துணை மேயர் கோ.காமராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், பல்லாவரம் தொகுதி பொறுப்பாளர் க. அன்புச்செல்வன், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், தலைமை கழக பேச்சாளர் ஆலந்தூர் மலர்மன்னன், தலைமை கழக பேச்சாளர் முகமது இப்ராகிம்,எஸ்.சதீஷ், இரா. நரேஷ்கண்ணா, எஸ். கே.நெப்போலியன், வி.ரவிச்சந்திரன்,சத்ய பிரபு,பம்மல் மா.சூரன், பா.செல்வம்,பி.எஸ்.ரவி,*

*மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதீனாபேகம்,மு. இன்பசேகர்,ரம்யா சத்திய பிரபு,சத்யா மதியழகன்,*

*வட்டக் கழகச் செயலாளர்கள் வி.எஸ். ஜெகநாதன்,என்.காந்தி, முகமது அப்பாஸ்,எம். சுகுமாரன், பி.ஸ்ரீதர் உள்ளிட்ட மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*பம்மல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் துரை இளங்கோவன் நன்றி கூறுகிறார்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பம்மல் தெற்கு பகுதி தி.மு. கழகம் செய்துள்ளது.*



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில் அயன்புரத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., திராவிடக் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்றினர். வட்டச் செயலாளர் எ.வேதா நன்றி கூறினார். இதில் தொகுதி பொறுப்பாளர் கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணியினர், நிர்வாகிகள் பங்கேற்றனர்.




திருச்சி மண்ணச்சநல்லூரில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் 4–ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கதிரவன் எம்.எல்.ஏ., கே.என்.அருண் நேரு ஆகியோர் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் அம்பிகாபதி, ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், இளங்கோவன், வழக்கறிஞர் செந்தில் குமார், நாமக்கல் துரை, சீனிவாச பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ தலைமை!

# தாம்பரத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

தாம்பரம், மார்ச். 8: தாம்பரம்மாநகரதிமுகசார்பில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின்71வதுபிறந்தநாளை முன்னிட்டு பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள்வழங்கும்விழாசண்முகம்சாலையில்தாம்பரத்தில் நடைபெற்றது.தாம்பரம்மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம் எல் ஏ தலைமை வகித்தார். மண்டலக்குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் வரவேற்றார்.திமுகபொருளாளர் டி.ஆர்.பாலு எம்பி, மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா எம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தேர்தல் பொறுப்பாளர்கள் மருதுகணேஷ், அன்புசெல்வம், மண்டலக்குழு தலைவர்கள் எஸ். இந்திரன், ச.ஜெயபிரதீப், தி வேலுமணி,எஸ் ஜி கருணாகரன்,மு வேலுமுருகன்,பி கே சத்தியபிரபு, ரமணி ஆதிமூலம்,இ மனோகர்,மலர் மு கருணநிதி, இரா விஜயகுமார் ,இரா ரத்தினகுமார் ,டைகர் சிவா , தி ச நடராஜன்,கோ தேனுபுரி ,ஆர் ஆகஸ்டின்,டி கோட்டி ,சி முத்துமாறன் ,எம் எஸ்லலித்ராஜதீபன்,எஸ்கண்ணன் ,ஜெ சத்தியசீலன் , வீ கார்த்திக் ,ச இராஜேஷ்,டி கே தாமஸ்,சபிரபு,ஜெஇன்சமாம், ஜெ ரவிகுமார்,இரா செல்வகுமார்,ஆர் செல்வகுமார்,செ சுரேஷ்,சிஜெகன்,சித்திரம்ஜா வாசுதேவன்,ஆர் சினா',ரீ தர் பாபு,சஞ்சீவி,பிவிஜகாம்பரம் ,செ செல்வபிரகாஷ்,எ ஆர் பாஸ்கர்,எ நவீன்குமார்,க மு சூரியா,உட்பட பலர் கலந்து கொண்டனர்.இக்கூட்டத்தில் டி.ஆர்.பாலு எம் பி அவர்கள் பேசுகையில், "தமிழகத்தின் மீது வெறுப்புணர்ச்சியை திணிப்பதால் மோடிக்கு நீங்கள்காட்ட வேண்டிய மதியாதையை காட்டியுள்ளீர்கள். 2016ம் ஆண்டு தேர்தல் பரப்புரையில் சுவீஸ் வங்கியில் பதுக்கிவைத்துள்ள கருப்பு பணத்தை பாஜக ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் மீட்டு ஒவ்வொரு குடும் பத்துக்கும் 15 லட்சம் அவர்களது வங்கிக் கணக்கில்செலுத்தப்படும்என மோடி தெரிவித்தார். ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள்ஆகியும்யாருக்கும் 15லட்சம் வரவில்லை" என்றார். திருச்சி சிவா எம்பி பேசுகையில், "தேர்தல் என்பது திருவிழா இல்லை, ஒரே நாளில் நீங்கள்எடுக்கும்முடிவுதான் 5 ஆண்டுகள். நாடும் அரசாங்கமும் யார் கையில்இருக்கப்போகிறது என தீர்மானிக்கும் நாள் என்பதை மறக்கவேண்டாம், மக்கள் தான்ஜனநாயகநாட்டில்உச்சகட்டநீதிபதிகள்என்று சொல்வது மிகைபடுத்தல் இல்லை. முக்கிய பொறுப்பில் உள்ள பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர்ஆகியோர்நாடாளு மன்றம்வருவார்கள்அவைக்கு வருவதிலை கிடையாது. அவர்கள் விரும்புவதை செய்வார்கள்,மணிப்பூர்கலவரம்பற்றிபேசநாடாளுமன்றத்தில் அனுமதி இல்லை, நாடாளுமன்றத்தில் பதில் கூற வில்லை, 10 ஆண்டுகாலம் பிரதமர் பத்திரிகையாளர்களை சந்தித்ததுஇல்லை.பாசிசத்தின் தத்துவத்தில் இத்தாலி ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரிஹிட்லர் இவர்கள் 2 பேர்தான் பாசிசத்தை கடைபிடித்தார்கள்,அரசாங்கம்இருப்பது மக்களுக்காகஆனால்மக்களே அரசாங்கத்திற்காகஎன்றுமாற்றிவிடுவார்கள்,அரசாங்கத்தை நடத்துபவரே எல்லாம் என்று கொண்டுபோய்விடுவார்கள், எதிர்த்து பேசினால் குரல்வலை நெரிக்கப்படும். நாட்டில் ஒரு இனம்தான் இருக்க வேண்டும் என்று கூறி அடக்கி ஒடுக்கி வைப்பார்கள், அதுபோல நிலை நமது நாட்டில் நிலவுகிறது" என்றார்.

பொதுமக்களுக்கு தையல் மெஷின்,ஆயின்பாக்ஸ்,கேஸ் அடுப்பு,கிரிக்கெட் பேட், கேரம் போர்டு, மாற்றுதிறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் என அனைவருக்கும் தேவையான பொருட்களை வழங்கப் பட்டது. இக்கூட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேலான கழக தோழர்களும்பொதுமக்களும் கலந்து கொண்டனர் நிறைவுரையை மாநகர மாணவரணி எஸ் கார்த்திக் அவர்கள் நன்றியுரையாற்றினர்.






# முதல்வர் உருவில் சேகுவேரா வாழ்கிறார்!



கடந்த நூற்றாண்டில் கியூபாவின் விடுதலைக்கு வித்திட்ட புரட்சியாளர்களில் முதன்மையாளராக உலக இளைஞர்களால் இன்றளவும் போற்றப்படும் தன்னலமில்லா தகைமையாளர் சேகுவேரா அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை அடக்கப் பிறந்த அரிமா. அவர் ஒரு கையில் துப்பாக்கியும் ஒரு கையில் ஸ்டெதாஸ்கோப்பையும் வைத்திருந்தவர். அவர் கியூபாவில் ஆட்சி அமைத்த பின் பிடல் காஸ்ட்ரோவிடம் கேட்டது, அனைவருக்கும் கல்வி தர வேண்டும் என்பதுதான்.

அதேபோல் பிரெஞ்ச் புரட்சிக்கு வித்திட்ட வித்தகர்கள் வால்டேர் மற்றும் ரூசோ. வால்டேருக்கு, சற்று காலம் தள்ளிப் பிறந்தாலும் எழுத்துக்காக ரூசோவைப் போற்றியவர் வால்டேர். ரூசோவின் 'சமுதாய ஒப்பந்தம்' புகழ் பெற்ற புத்தகம் என்றாலும் அவர் எழுதிய எமிலி என்கிற புத்தகம் தான் கல்வியின் அவசியத்தைப் புரிய வைத்து கற்றோரை அதிகமாக்கி முடியாட்சிக்கு முடிவுரை எழுதியது.

சேகுவேரா காலத்தால் ரூசோவிற்கு வெகுகாலம் பிறகு பிறந்திருந்தாலும் இங்கும் நம் தமிழ் மண்ணிலும் அவரை நேசிக்கும் நெஞ்சங்கள் அதிகம். அவரைப் போல் தான் இன்று கழகத் தலைவர் கடுஞ்சொல் அறியா கண்ணியவான், தமிழினம் கல்வியில் சிறந்து விளங்க கல்விக்காக நிதிநிலை அறிக்கையில் சுமார் 52,000 கோடி வழங்கியுள்ளார். ஆதிக்கவாத ஒன்றிய அரசு அள்ளித் தர வேண்டாம்; கிள்ளிக் கூட தர வேண்டிய நிதியை தராத போதும் ஒரு கரத்தில் கல்வி; மறு கரத்தில் சமூகநீதி என எடுத்து இன்று தமிழ் மண்ணின் உரிமை காக்கும் சேகுவேராவாக திகழ்ந்து நல்லாட்சி நல்கி வருகிறார் கழகத் தலைவர். சர்வாதிகாரி பாடிஸ்டாவை எப்படி சேகுவேரா வீழ்த்தினாரோ அதைப்போல் சர்வாதிகார போக்கோடு ஆளும் பிரதமர் மோடியை வீழ்த்தப் போகிறார் நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அனைத்து மக்களும் அகம் மகிழ்ந்து வாழ்த்திட அகிலத்திற்கே வழிகாட்டும் அற்புதமான அதே வேளையில் அறிவு சார்ந்த நிதிநிலை அறிக்கையினை அழகு தமிழ் மணக்க தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் உழைப்பால் உயர்ந்த மகுடம் சிரம் இருக்கும் போதும் மமதை சிறிதுமில்லா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாட்டிற்கு தந்துள்ளார்.

'கற்றிடுக! கற்றிடுக! கற்றிடுக!' என்ற மாவீரர் சோவியத் நாட்டை உருவாக்கிய புரட்சியாளர் லெனின் கூறியதைப் போல் 'கேட்டிடுக! கேட்டிடுக! கேட்டிடுக!' என்று தேனமுதே செவிகளில் சேர்ந்திடும் வண்ணம் நிதிநிலை அறிக்கை படிக்கத் தொடங்கிய நிமிடம் முதல் அடுத்த வரி என்ன; அதில் வரும் தித்திக்கும் செய்தி என்ன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவலுடன் கேட்கும் வண்ணம் அருஞ்சுவையாய் அமைந்ததுதான் கழகத் தலைவர் அவர்களின் கருத்துமிகு நிதிநிலை அறிக்கை. எதை விடுவது? எதை எழுதுவது? எதில் தொடங்குவது? எதில் முடிப்பது? அத்தனையும் நற்சுவை மிக்க நல்அறிவிப்புகள்.

'எனக்கு ஆடம்பரம் தெரியாது! அடாவடி தெரியாது! ஆர்ப்பாட்ட அரசியல் தெரியாது! அடுக்கு மொழியில் அன்னைத் தமிழைப் பேசத் தெரியாது!' என்ற அவர்தான் ஆளுமையில் சிங்கம் என்று தமிழ்நாட்டு மக்கள் வாழ்த்தும் வண்ணம் ஆளும் நம் முதல்வர் அவர்களின் ஆற்றலின் வெளிப்பாடே இந்த நிதிநிலை அறிக்கை.

ஆரம்பமே முன்னோர்களை மதிக்கும் முத்தாய்ப்பான நினைவுகூரல்கள். ஆம்! திருவள்ளுவர், பி.டி.தியாகராயர், பென்னிகுயிக், பனகல் அரசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பெருந்தலைவர் காமராஜர், எம்.ஜி.ஆர், நீதிக் கட்சி, தி.மு.க, திராவிட மாடல் அரசு என்று அனைவரின் மற்றும் அனைத்தின் சிறப்பு களை கூறிய பாங்கு திருக்குவளை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தனிச் சிறப்பு.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

எதிர்காலத் தலைமுறையினரின் இனிய வாழ்வை எண்ணத்தில் கொண்டு எழுத்தோவியமாய் எத்தனை திட்டங்கள். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்றார் 1929ல் தந்தை பெரியார். அதை நிறைவேற்றிக் காட்டினார் 1989ல் முத்தமிழறிஞர் கலைஞர். பெண் கல்வி அவசியம் என்றார் தந்தை பெரியார். அதற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் புதுமைப்பெண் திட்டம் மூலம் 2,73,000 மாணவியர்களுக்கு கல்லூரிக் கல்வி பயில வழிவகுக்கும் வண்ணம் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தந்து பெண் கல்வியை ஊக்குவித்தார் முதல்வர் தளபதியார் அவர்கள்.

அதனால் நடப்பு ஆண்டில் உயர்கல்வி பயில வந்த மாணவிகள் எண்ணிக்கை 34 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது 34,460 மாணவிகள் கூடுதலாக சேர்ந்துள்ளனர். தற்போது இந்தப் புதுமைப் பெண் திட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழில் படிக்கும் மாணவிகளும் பயன் பெறும் வகையில் விரிவு படுத்தப்படும் என்று அறிவித்து அதற்காக 370 கோடி ரூபாய் ஒதுக்கி கல்லூரி கல்வி ஏழை மாணவிகளுக்கு இனி கனவல்ல அதை நனவாக்கி காட்டுகிறேன் என்று செய்துள்ளார் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள்.

மாணவிகளுக்கு மட்டும் கொடுத்தால் போதுமா? பள்ளிப் படிப்பை முடித்து குடும்பச் சுமையை ஏற்று உயிர்கல்வி பயில பணமின்றி வேலைக்குச் செல்லும் மாணவர்களின் நிலை அறிந்து குழந்தைத் தொழிலாளர்கள் என்பதையே ஒழிக்கும் வண்ணம் கல்விக்கு பணம் தடையா! ஒருபோதும் இருக்க விடேன் என்று தமிழ்ப் புதல்வன் என்ற புதிய திட்டம் அறிவித்து அதன் மூலம் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் கல்லூரி கல்வி பெற மாதம் ரூபாய் 1000 வழங்கப்படும் என்று அறிவித்துள்ளதால் மூன்று லட்சம் மாணவர்கள் பயனடைவர். இதற்காக 360 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார் நம் முதல்வர் அவர்கள். அதே வேளையில் பெற்றோருக்கு நிதிச்சுமையைத் தந்திடாமல் மாணவ கண்மணிகள் உயர்கல்வி பயின்றிட 2024-25 ஆம் ஆண்டில் மட்டும் 2500 கோடி வங்கி மூலம் கடன் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

1921 ஆம் ஆண்டு மாணவர்கள் பசியின்றி பயில வேண்டும் என்பதற்காக ஒரு அணாவிற்கு ஒரு நாளைக்கு முதன்முதலாக ஆயிரம் விளக்கு பள்ளியில் மதிய உணவு வழங்கும் திட்டம் பி.டி.தியாகராயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நீட்சியாக காமராஜர் மாநிலம் முழுவதும் மதிய உணவுத் திட்டத்தை விரிவு படுத்தினார். பிறகு அதனையே எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமென அறிவித்தார். அதனை உண்மையான சத்துணவாக வழங்கிட வாரம் ஐந்து முட்டைகள்; அதை விரும்பாத மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்கிட முத்தமிழறிஞர் கலைஞர் உத்தரவிட்டார்.

கலைஞர் அவர்களின் அன்பு மகன் அயராத உழைப்பால் அன்பான மக்களின் ஆதரவோடு முதல்வரான கழகத் தலைவர் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் காலை உணவாக கஞ்சித் தண்ணீருக்கும் வழியில்லாமல் கல்விச்சாலை வராத மாணவச் செல்வங்களை மனதில் எண்ணி இன்னல் தரும் பசியை இல்லாமல் களைந்திட தந்தையானவராய் திகழ்ந்து காலை உணவுத் திட்டத்தை அறிவித்தார். அதனால் கல்வி கற்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை கருணை உள்ளம் கொண்ட முதல்வரால் அதிகரித்தது. இனி தமிழ்நாட்டில் கல்வியறியா பிள்ளையே இல்லையெனும் நிலை உருவாகியுள்ளது. "களர் நிலமல்ல தமிழ் நிலம் கல்வி தரும் அருள் நிலம்" என இந்திய நாடே இன்று போற்றுகிறது.

தெலுங்கானாவில் சமீபத்திய தேர்தலுக்கு முன்பு வரை முதல்வராக இருந்த சந்திரசேகர ராவ் இத்திட்டத்தை தொடங்கினார். அதனால் 20 லட்சம் மாணவச் செல்வங்கள் அங்கு பயனடைந்து வருகின்றனர். ஏன்; அமெரிக்காவில் ஒரு மாநிலத்தில் இந்த காலை உணவு திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ள தாக செய்திகள் கூறுகின்றன.

2022-ஆம் ஆண்டு அறிவுலக மேதை அண்ணா அவர்கள் பிறந்தநாளில் இத்திட்டத்தை நம் அறிவுப் பெட்டகம் முதல்வர் மதுரையில் தொடங்கி 2023 ஆம் ஆண்டு மாநிலத்தில் உள்ள 30,992 அரசுப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு பயிலும் 15 லட்சம் மாணவ கண்மணிகள் பயனடைந்தனர்.

தற்பொழுது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் பயனடையும் வண்ணம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. வயிற்றுப் பசியை போக்கினால் அறிவுப்பசி தீர்ந்து அறிவாற்றல் வளரும் என்பதை அறிந்து வாழும் வள்ளலாராகத் திகழ்கிறார் 'மாணவ நேசன்' இதழை தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே தொடங்கிய கலைஞர் அவர்களின் புதல்வர் மாணவ நேச முதல்வராக திகழ்ந்து வருகிறார். இதற்காக 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்துள்ளார்.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ் போன்ற ஒன்றிய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் தேர்வு விகிதம் கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருவதைக் கண்டு கவலை கொண்டு இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் தேர்வு பெற ஆயிரம் மாணவர்களுக்கு முதல்நிலை தேர்வுக்கு தயாராக மாதம் 7500 ரூபாயும் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோர்க்கு மாதம் 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கிட கடந்த ஆண்டு 10 கோடி ஒதுக்கி தந்த நம் முதல்வர், இந்த ஆண்டு மேலும் 6 கோடி ஒதுக்கித் தந்துள்ளார் குணத்தில் சிறந்த குணாளர் திராவிட மாடல் அரசின் சிற்பி தளபதி அவர்கள்.

நாடு போற்றும் நல்ல திட்டம் தான் 'நான் முதல்வன்'. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 28 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 18 ஆயிரம் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், 20000 கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்றவர்களில் 1.19 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இப்படி மாணவ நலனில் அக்கறை கொண்டு அறிவில் சிறந்தோர்களை உருவாக்க இந்த ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் 100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள் உருவாக்கிட அறிவித்துள்ளார்.

உயர் கல்வியில் உச்சநிலையில் இருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிய உன்னதத் தலைவர் நம் முதல்வர் அவர்கள்தான். கல்லூரிகளில் கட்டடக் கட்டமைப்பு பணிகள் 200 கோடி செலவில் செயல்படுத்தப்படுவதோடு 236 அரசு கல்வி நிறுவனங்களுக்கு கணினி மற்றும் இதர அறிவியல் கருவிகள் 173 கோடி ரூபாயில் வழங்கப்படுவதோடு 45 அரசு பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளை (பாலிடெக்னிக்) தொழில்துறை 4.0 தரத்திற்கு உயர்த்திட 3014 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டம் அறிவித்துள்ளார் அதிகாலை ஆதவனாம் நம் முதல்வர்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவச் செல்வங்களுக்கு தொழில் கல்வி கற்க 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அனைத்து கல்விச் செலவுகளையும் திராவிட மாடல் அரசு ஏற்றுக் கொண்டது. அப்படி தற்பொழுது படித்து வரும் 28,749 மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்பதாக அறிவித்து; வரும் நிதியாண்டில் ரூபாய் 511 கோடி செலவிடப்படுமென கல்வி வள்ளலாகத் திகழ்ந்து வரும் கருணையுள்ளத்துடன் நம் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா நூலகம் சென்னையில் அமைத்தார். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை கழகத் தலைவர் தளபதி அவர்கள் மதுரையில் அமைத்தார். இந்த நூலகங்கள் மூலம் ஆண்டுதோறும் பல லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இதனால் தான் தொகுதிகள்தோறும் நூலகங்கள் அமைக்க இளைஞரணிச் செயலாளர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் முயற்சி எடுத்து வருகிறார். திருக்குவளை மரபணு சிறப்பாக மக்களுக்காக உழைக்கும் மரபணுவாகத் திகழ்ந்து வருகிறது என்பது எப்படி நிரூபணம் ஆகிறது பாரீர்! தற்போது மாணவர்களில் இளம் தலைமுறையினரின் எண்ணத்திற்கு ஏற்ப லட்சக்கணக்கான அனைத்துத் துறை நூல்களும் இருக்கும் வண்ணம் கோயம்புத்தூரில் நூலகம் இவ்வாண்டு அமைக்கப்படும் என்றும் நம் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இவை கல்விக்கு மட்டுமே! பள்ளி கல்விக்கென்று ரூபாய் 44,042 கோடியும், உயர்கல்வித் துறைக்கென்று 8212 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்துள்ளார் நம் தமிழ்நாடு முதல்வர்.

"காலை எழுந்தவுடன் கல்வி, மாலை முழுவதும் விளையாட்டு" என்றார் பாரதியார். அதைப்போல் கல்வியோடு சிறந்து விளையாட்டிலும் சாதனை புரிந்திட விளையாட்டுத் துறைக்கென 400 கோடி ஒதுக்கித் தந்துள்ளார் நம் முதல்வர். முதல்வர் அவர்களும் விளையாட்டுத் துறை அமைச்சர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் காட்டும் அக்கறையாலும், ஊட்டும் ஊக்கத்தாலும் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் ஆசிய விளையாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகப் பதக்கங்கள் பெற்றதோடு கேலோ விளையாட்டிலும் அதிகப் பதக்கங்கள் பெற்று இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை புரிந்துள்ளனர்.

அனைவருக்கும் கல்வி தரச் சொன்ன புரட்சியாளர் சேகுவேரா சிறந்த கால்பந்து வீரர். இப்போது புரிகிறதா கல்வி தரும் வள்ளல் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் வடிவில் சேகுவேரா எப்படி வாழ்கிறார் என்பது. நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறையை மட்டும் தொட்டுத் தந்துள்ளோம் மற்றவைகளையும் பின்பு காண்போம்.

**மாணவச் செல்வங்களே! மாட்சிமை கொள்ளுங்கள்!**
**மன்பதை முதல்வரை மனதில் நிறுத்துங்கள்!**
**நாடாளும் நல்லவரை நாளும் நினையுங்கள்!**
**நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதும் தாருங்கள்!**



மாதவரம்வடக்குபகுதிதி.மு.க.சார்பில்பகுதிச்செயலாளர்புழல்எம்.நாராயணன்ஏற்பாட்டில்முதலமைச்சர்,கழகத்தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு "எல்லோருக்கும் எல்லாம்" பொதுக்கூட்டம் 16 வது வட்டம், மணலி புதுநகரில்நடைபெற்றது.இ.கண்ணப்பன்,கா.தாமரைச்செல்வன்,கே.கருணாகரன்வி.ஆர்.குப்பன்ஆகியோர்முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றி 1500 பேருக்கு நல உதவிகளை வழங்கினார்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (06.03.2024) ரூ.46 கோடி மதிப்பீட்டில் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மருத்துவக்கவுன்சிலுக்கான புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் பதிவாளர் மரு.வி.காமராஜா, ஒருங்கிணைப்பாளர் மரு.முருகானந்தம், உறுப்பினர் மரு.எஸ்.சிவராம் கண்ணன். மரு. பிரபாகரன், மரு.ஸ்ரீனிசாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூரில் பாக முகவர்கள் கூட்டம்!

திருப்பத்தூர், மார்ச் 8-

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் சார்பில் நாதிகுப்பம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற BLA-2, BLC, தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., ஆம்பூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் இ.ஜி.சுகவனம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அ.செ.வில்வநாதன், மு.அசோகன், கோவிந்தம்மாள் பெருமாள், சங்கீதபாரி, வீ.வடிவேல், ராமநாதன், குமார், பொன்னம்பலம், சோபாவெங்கடேசன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




தலைமைச் செயலகத்தில், நேற்று (07.03.2024) முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ். பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள்வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல்துறைத் தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோடை விடுமுறை:

# தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் சிறப்பான ஏற்பாடு!

### சுற்றுலாப் பயணிகளுக்கு அமைச்சர் கா.இராமச்சந்திரன் வேண்டுகோள்!



சென்னை, மார்ச் 8-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து, வருகின்ற கோடை விடுமுறையில் மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும் - பொதுமக்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற கோடைகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு பொதுமக்கள் வருகைதந்து மகிழ்ச்சியாக சுற்றுலா மேற்கொள்ள மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் பிறதுறை அலுவலர்களுடன் இணைந்து முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் வசதி அளிக்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தமிழ்நாடு ஓட்டல் தங்கும் விடுதிகளின் அறைகளை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தேவையான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல் ஆகிய மலைவாழிடங்களுக்கு சுற்றுலா பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் திருப்பதி, சென்னை-மாமல்லபுரம், காஞ்சிபுரம்- மாமல்லபுரம், திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி, என ஒரு நாள் சுற்றுலா, மைசூர்-பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா, அறுபடை வீடு முருகன் கோவில்கள் செல்லும் நான்கு நாட்கள் சுற்றுலா, எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவா-மந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா, யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வருகின்ற கோடை விடுமுறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் பொது மக்கள் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும் மூத்த குடிமக்கள், போர் விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தள்ளுபடி சலுகைகள் வழங்கப்படுகின்றன.

ஒரு நபர் இந்த தள்ளுபடி சலுகைகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே பெற இயலும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 180042531111 மற்றும் 044-25333333, 044-25333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

மி.து.ந.க.எண்.சி.பி.மே2 / பி1 / 1349 / 2023

**குறுகிய கால மின் ஒப்ப அறிவிப்பு**

மின்துறையில் குறுகிய கால மின் ஒப்பம் கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை அவர்களால் வரவேற்கப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 5, வார்டு 58ல் ரிப்பன் கட்டிடத்தில் உள்ள மாமன்ற கூடத்தில் இருக்கும் Analog ஒலிபெருக்கி அமைப்பை (Public Addressing System) மேம்படுத்துவதற்கான சிஸ்டம் சர்வர் மென்பொருள் உள்ளிட்ட டிஜிட்டல் இன்டர்ஃபேஸ் யூனிட்கள், ஆடியோ பவர் ஸ்விட்சிங் சாதனங்கள், கேபிள் மற்றும் துணைக்கருவிகளுடன் புதிய ஐபி அடிப்படையிலான மாடுலர் டிஜிட்டல் ஃப்ளஷ் மவுண்ட் கான்ஃபரன்ஸ் சேர்மன் மற்றும் டெலிகேட் யூனிட்களை வழங்கி, நிறுவி, சோதித்து மற்றும் இயக்கி வைக்கும் பணி.**

**பணியின் மதிப்பு : ரூ.3,37,25,739.70 முன் வைப்புத் தொகை ரூ.3,37,260/-**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்களை தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் **14.03.2024 முற்பகல் 11.15** மணிக்குள் பங்கேற்கலாம், **14.03.2024 பிற்பகல் 3.15 மணிக்கு** ஒப்பங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 1468 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் / மின்துறை**

### கே.எஸ்.எம். நாதன் தலைமை! அமைச்சர் பி.கே. சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் ஒன்றியத்தின் முதன்மை! தமிழ்நிலத்தின் புதுமை வாழ்த்தரங்கம்!

### ப.சிதம்பரம் எம்.பி. – ஜி.விஸ்வநாதன் – சுப.வீரபாண்டியன் – அஜய் ரத்னம் சிறப்புரை!

சென்னை, மார்ச்.8-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க 108 (அ) வட்டம் சார்பில், மார்ச்- 1 மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள் ஒன்றியத்தின் முதன்மை ! தமிழ்நிலத்தின் புதுமை ! எனும் தலைமைப்பில் புகழரங்கம் சூரியச் சுடர்-60-வது நிகழ்ச்சி நாளை 9.3.2024 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மலையாள கிளப் ஆடிட்டோரியம் சேத்துப்பட்டில் நடைபெறுகிறது.

கே.எஸ்.எம். நாதன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில், மாபெரும் புகழ ரங்கம் புகழுரைப்போர் பா. சிதம்பரம், (முன்னாள் ஒன்றிய அமைச்சர்) ஜி. விஸ்வநாதன் (வி.ஐ. டி பல்கலைக்கழகம்), சு.ப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர்) - (சமூக நீதி கண்காணிப்புக்குழு தலைவர்) அஜய் ரத்னம் (திரைப்பட நடிகர்) ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் வி. சுதாகர், சொவேலு, கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமலு, கே. எஸ்.எம் நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஆர். நிர்மலா தேவி, பரிதிஇளம் சுரிதி, பாத்திமா முஸ்ஸபர், எஸ் ரசூல், டிவி வேலு, எம் மலர்மாறன், கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், விவிஜயகுமார் எஸ் டால்பின் ஹரி , இ மொய்தீன், வான்மதி கதிரவன் உள்பட மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து ளகொள்கின்றனர்.

நன்றியுரை எல். சுந்தர்ராஜன்



புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலை நகரில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உயிரிழந்த சிறுமியின் உயிரிழப்பிற்கு நீதி வேண்டியும், சிறுமி உயிரிழப்பிற்கு தார்மீக பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலகக்கோரியும், சிறுமி உயிரிழப்பிற்கு காரணமாக குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும், புதுச்சேரியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுபடுத்தக்கோரியும் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் கண்டனப் பேரணி நடைபெற்றது. அண்ணா சாலையில் இருந்து தொடங்கிய பேரணி நேரு வீதி வழியாக சென்று சட்டமன்றம் அருகில் நிறைவடைந்தது. இந்த பேரணியில் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் இரா. சிவா, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, காங்கிரஸ் மாநில தலைவர் வைத்தியலிங்கம், திமுக அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், திமுக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், வைத்தியநாதன் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்று புதுச்சேரியில் ஆளும் பாஜக என்.ஆர்.காங்கிரஸ் அரசுக்கு எதிராகவும், கோரிக்கைகளை வலியுறுத்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். மேலும் சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டி இந்தியா கூட்டணி கட்சி சார்பில் நாளை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை புதுச்சேரி மாநிலம் தழுவிய பந்த் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### ராஜா சம்பத் தலைமையில் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி - சைதை சம்பத் முன்னிலையில்

# சைதை கிழக்குப் பகுதி இளைஞரணி சார்பில் முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

### எஸ்.ஜெகத்ரட்சகன் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் 571 பேருக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, மார்ச் 8-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 571 பேருக்கு நல உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (8.3.2024) மாலை 6 மணியளவில் அப்பாவு நகர், சாஸ்திரி தெரு, அரங்கநாதன் சுரங்கப் பாதை அருகில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா சம்பத் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ் , எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மு.இராஜா, மு.பாக்கியலட்சுமி, என். நந்தகோபால், எஸ்.ராதா கிருஷ்ணன், சைதை ஏ. மஜீத் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசுகின்றனர்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ணகுமார், பகுதி அமைப்பாளர் கொடி கே.பாலா, துணை அமைப்பாளர்கள் மே.குணா, பா. பரத்குமார், பா.அருண்குமார், தி.கோகுலன், கோ.ராஜன், 169 அவட்ட நிர்வாகிகள் வே.கோதண்டன், சைதை ஆ.வரதன், டி.கண்ணன், சொ.முருகையன், மு.சாந்தி, எம். பாபு, விரே் சம்பத், கே.பி. மகேஷ், பி. செல்லப்பாண்டியன், ஏ.எஸ்.ரியாஸ் அகமது ஆகியோர் வரவேற்கின்றனர்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், திரைப்பட நடிகர் - இயக்குனர் போஸ் வெங்கட் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த்ரமேஷ், ஏ.எம்.பி.பிரபாகர்ராஜா, காரம்பாக்கம்கணபதி, மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், க. தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், த.விஸ்வநாதன், ,மு.மனோகரன், எஸ்.பாஸ்கர், வாசுகி பாண்டியன், தா. மோகன் குமார், அணிகளின் அமைப்பாளர்கள்: சைதை சாதிக், ஆர்.டி.மூர்த்தி, நா. மணிகண்டன், ஜெ.அகஸ்டின், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கர், பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், மு.ஆரோக்கியம், ஆர். ராஜ்குமார், ஆர்.அருணகிரி,

களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் எல்.ஆரோக்கியராஜ், நா.ராதாகிருஷ்ணன், க.மணி, கோட்டூர் கோ. சண்முகம், நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமல நாதன், மாவட்ட பிரதிநிதிகள்: வே.முருகன், இரா.சுதா பிரியன், ஜி. செல்வராஜ், டி.வி.நரசிம்மன், எஸ்.சேகர், க.உமாபதி, எஸ்.ஜெ.சலாம், எஸ். ரவி, கே.எம்.எஸ்.கணேசன், மு.மகேஷ்லாரன்ஸ், ஜி. யோவான், வே.ரமேஷ் குமார், கோட்டூர் ந.பாபு , கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, ,ஆர்.எல்.செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், பொன். ஜெய்சிங்,பாக்சர் ஏ.ரவி, ஆர்.ரவி, ஜி.பாபு, சி. தேவேந்திரன், மேகலாஜெயவேல், எஸ்.கரிமுல்லா, ஏ. சுப்பிரமணி, எஸ்.ஏ. மோகன்குமார், ரா.தமிழ்அன்பன், பி.திவாகர் , ஏ.கௌதம், செ. அருண், இ.மதனசேகரன், க.வேல்முருகன், பி.செல்வம், ஆர்.ஜி.ஸ்டாலின், ஆர்.செல்வம், கே.எஸ். பாபு, இரா.சுதாகர், எஸ். எம்.மோகன்தாஸ், ஜெ.வி. பிரதாப், மோ.எழில், எஸ். பிரகாஷ், பார்வதி, புவனேஸ்வரி, ஆர்.சேதுராமன், பு.ஜவகர்தீன், மு. முருகன், மு.செல்வக்குமார், எஸ்.மணிகண்டன், எஸ்.ஜெ.அன்புரோஸ், மு. ஜெயவேல், சா.ஜெய ராமன், ம.சுகுமார், இரா.சத்தியா, க.தீபன், ஜி.கே.பிரபு, ஜி.வெங்கடேசன்,

169வது வட்டக்கழக நிர்வாகிகள்: அ.ஆரி இரா. தமிழ்வாணன் துரை சரவணன் மு.சந்திரா ஆ.விக்டர் மை.அருள்ராஜ் வி. என்.செல்வமணி ஈர்க்கே. பிரபு அ.ஆனந்தராஜ் ஆபரணி மற்றும் ஆ.தேவகுமாரன், கி.சிவபிரகாஷ், ஏ. துரைராஜ், மு.மணவாளன், ஆர்.எஸ்.டி.கோட்டி, எஸ்.சவுரிமுத்து, சி.செல்லதுரை, ஆ.கோபால கிருஷ்ணன், லோ.குமார், சி.வீரா, இ.ராஜி, கி.பாபு, எம்.சாமுவேல்ராஜ், எஸ். கே.எஸ்.ஷெரீப், வெ. சிவப்பிரசாத், எம்.முகமது ரஃபியுதீன், எஸ்.சுரேஷ், ரஞ்சித், இரா.எழிலன், ஆ.பிரேம்குமார், இள.ஆதவன், அரிஷிகுமார், ஆர். செந்தில், ஆர்.கார்த்திக், பி.எஸ்.ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இள.அரவிந்தன், எம். அருண்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மயிலை கிழக்குப் பகுதியில்

# வட்டங்கள் தோறும் கழக அரசின் சாதனை விளக்க துண்டு பிரசுரம்!

### மயிலை த.வேலு - தமிழச்சி தங்க பாண்டியன் - எஸ்.முரளி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 8

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதியில் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரம் கடந்த 01.03.2024, வெள்ளிக்கிழமை அன்று வட்டம் வாரியாக மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல் படி

மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே. எஸ்.ரவிச்சந்திரன் ஆலோசனைப்படி பொதுமக்களிடம் விநியோகம் செய்யப்பட்டது.

மயிலை கிழக்குப் பகுதி வட்டங்கள் தோறும் இல்லம் தோறும் ஸ்டாலின்,

கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனையை விளக்கி துண்டு பிரசுர விநியோகம் வட்டம் வாரியாக மாவட்ட கழகத்தின் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியனால் வழங்கப்பட்டு திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது.

நடைபெற்ற நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

124-வது வட்டம், ஏ.தாஸ் தலைமையில் அனைத்து பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப் பட்டது.

124 ‘அ’ வது வட்டம், மா.பா.அன்பு தலைமையில் அனைத்து பாகத்திலும்

பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

125-வது வட்டம், அ. தவனேசன் தலைமையில் அனைத்து பாகத்திலும் பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

125 ‘அ’வது வட்டம், வி.வெற்றிவேல் தலைமையில் அனைத்து பாகத்திலும் பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப் பட்டது.

126-வது வட்டம் - கோ .கண்ணன் தலைமையில் அனைத்து பாகத்திலும் பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

171-வது வட்டம், துரை பார்த்திபன் தலைமையில் அனைத்து பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப் பட்டது.

171 ‘அ’வது வட்டம், பா.பொன்னுசாமி தலைமையில் அனைத்து பாகத்திலும் பாக முகவர்கள் முன்னிலையில் வழங்கப் பட்டது.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30வது வட்டத்தில் இல்லம்தோறும் ஸ்டாலின் குரல் முதல் கட்ட திண்ணைப் பிரச்சாரத்தை மாதாவரம் எஸ் சுதர்சனம் தொடங்கி வைத்தார். உடன் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், வட்ட கழக செயலாளர் டி.சுந்தரம், எம்.சரவணன், இ.ராமன், பி.எஸ்.என்.எல். தயாளன் ஏவி, முருகன், பரமேஸ்வரி, சக்கரபாணி, உமா மகேஸ்வரி, ஹைராபானு, வி பாஸ்கர், வெங்கட்ராமன், கருணாநிதி, திருமலை, ஜி.துரைசாமி, பி.மகேஷ், கா.மோகன், பாபு, சி. ஹரிஷ், மூர்த்தி, காஞ்சி சண்முகம் மற்றும் பலர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலாத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (7.3.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி கலந்து கொண்டார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கீழ்முதலம்பேடு காவரப்பேட்டை ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியத்திலிருந்தும் மாவட்ட ஊராட்சி நிதியும் இணைந்து ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட எரிவாயு தகன மேடையினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமையேற்று திறந்து வைத்தார் உடன் ,, மாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் கேவிஜி.உமாமகேஸ்வரிவேணு, கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சுகபுத்ரா, ஒன்றிய செயலாளர் கி.வே.ஆனந்த் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் பிஜெ.மூர்த்தி, மாநில தகவல் தொழில்நுட்பம் அணி துணை செயலாளர் சி.எச்.சேகர், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், பொதுக்குழு உறுப்பினர் பா சே குணசேகரன் , நிர்வாகிகள் எம். எல்.ரவி, வெங்கடாசலபதி, ஆர்.டி.இ.உதயசூரியன், பாஸ்கர், நகர மன்ற தலைவர் பரிமளம், பொன்னேரி நகரச் செயலாளர் ரவிக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் நமச்சிவாயம் , சாரதம்மாள் முத்துசாமி , தேசரணி தேசப்பண், ராமஜெயம், சித்ரா முனுசாமி, ஒன்றிய கவுன்சிலர் இந்திரா திருமலை, ஜெயந்திகஜா, ஜோதி, பிரசாந்த், மற்றும் மாவட்ட ஒன்றிய ஊராட்சி நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

### அ.ரேவதி எம்.சி. தலைமை! எஸ்.முரளி - நந்தனம் கி.மதி முன்னிலையில்

# கழகத் தலைவர் பிறந்தநாள்! மங்கையர் வாழ்த்தும் விழா! நலத்திட்ட உதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 8-

எல்லோருக்கும் எல்லாம்" மயிலை கிழக்கு பகுதி மகளிர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் பிறந்த நாள் முன்னிட்டு மங்கையர்கள் வாழ்த்தும் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (08.03.2024-வெள்ளிக்கிழமை), மாலை 5.00 மணியளவில் ராஜா அண்ணாமலைபுரத்தில் முத்தமிழ் பேரவையில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் 125வது வார்டு மாமன்ற உறுப்பினர் - வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு உறுப்பினர் அ.ரேவதி எம்.சி. தலைமை வகிக்கிறார்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., 171வது வட்ட செயலாளர் துரைபார்த்திபன், 171 அ வட்டசெயலாளர் பா.பொன்னுசாமி, 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, 124வது மாமன்ற உறுப்பிளர் விமலா கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.பானுசலிம், கே.மலர், செல்விசௌந்தரராஜன், லஷ்மிஉதயகுமார், ஏ.குமாரி, அகல்யாவிஸ்வநாதன், ரேவதி பொன்னுசாமி, சாந்தகுமாரி, விஜயா வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குன்றனர்.

இதில் மயிலை பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், உதயகுமார், ஜி.ஆர்.இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், வி.முருகையன், மயிலை பகுதி வட்டசெயலாளர்கள் அ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மு.இராஜேந்திரன், மாவட்ட பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் சுசீலா, தீபாமூர்த்தி, டி.கிருஷ்ணவேணி, சித்ரா, மோ.அண்ணபூரணி, டில்லிராணி, கலையரசி, ஆசையம்மாள், ரஞ்சிதம்மான், கலைராணி, ஜமுனா, கிருஷ்ணவேணி, பூங்கொடி ,அன்புச்செல்வி, லோகநாயகி, அம்மு, வச்சலா, சாந்தி, கிரிஜா, கலைச்செல்வி, சாந்தி, சுசீலா, சாந்தி, தேன்மொழி, தங்கம், பார்வதி, அமுதா, செண்பகம், துளசி, சுமித்ரா, லைட்மேரி மாலதி, மரியா, பிலோமீனா, தாட்சயணி, யசோதா, மஞ்சு, செல்வி, கோமளா, கி.பி.தங்கம் எஸ்.விஜயா ப.செந்தாமரை

நன்றியுரை: மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் கவிதா குமாரிமுத்து

நிகழ்ச்சி ஏற்பாடு : மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் 125வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி எம்.சி.

### ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி

# 112,122அ, 109 அ வட்டங்களில் திண்ணைப் பிரச்சாரம்!

## பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள்!

சென்னை,மார்ச்.8-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக சார்பில் 112வது, 112 அ, 109அ வட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு திண்ணைப் பிரச்சாரம் இன்று 8.3.2024 மாலை 6 மணி துவங்கி இரவு 9 மணி வரை மேற் கண்ட வட்டங்களில் கழகத் தலைவருடைய 3 ஆண்டு கால ஆட்சியுடைய சாதனைகளையும் பாசிச பாஜக அரசை கண்டித்து திண்ணைப் பிரச்சாரம் 112வது வட்டம் 6 மணி முதல் 7 மணி வரை வரதராஜப் பேட்டை பிரதான சாலை 112 அ வட்டம் 7 மணி முதல் 8 மணி வரை டிரஸ்ட்புரம் 8 வது தெரு பிள்ளையார் கோவில் அருகில் 109 அ வட்டம் 8 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ராமபுரத்தில் நடைபெறுகிறது.

திண்ணை பிரச்சாரத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. ,

கழக அமைப்பு இணை செயலாளர் செயலாளர் அன்பகம் கலை,

மருத்துவர் அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ.,

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம்,

ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு திண்ணை பிரச்சாரம் செய்கின்றனர்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ்டானியல். மாவட்டக்.கழக. நிர்வாகிகள்.த.விக்டர்.ஆர். துரை. வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின். பாபு, பகுதி.கழக. நிர்வாகிகள்.அவைத்.தலைவர். புவி.பாலாஜி, துணை. செயலாளர்கள.என்.பி.இதயத்.பாஷா.ஸ்டெர்லிங். மோகன். ரா.பொன்னம்மாள், பா.கமலக்கண்ணன், வட்ட.செயலாளர். வரதை.த.பரி, மு.மோகன், சா.டேவிட்.இன்பராஜ், க.சிட்டிபாபு, த.குணசேகர், தினேஷ்.பிரபு, மாவட்ட.பிரதிநிதிகள்.அ.குப்பன், எஸ்.பார்த்திபன், த.ஐசென்ட், என்.இ.சரவணன்.தட்சிணாமூர்த்தி, பா.சுரேஷ், எம்.டி. ஆர்.புகழ், ஆர்.சீனிவாசன், வி.என்.பாபு மற்றும் மாவட்ட கழக பகுதி கழக வட்டக்கழகத்தினுடைய நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்வர்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், **வடமதுரை**, **குஜிலியம்பாறை** ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **வடமதுரை கிழக்கு**, **வடமதுரை மேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **வடமதுரைகிழக்கு**, **வடமதுரைமேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.வேலாயுதம்பாளையம், 2.கானப்பாடி, 3.மோர்பட்டி, 4.புத்தூர், 5.சுக்காம்பட்டி, 6.சித்துவார்பட்டி, 7.கொம்பேறிபட்டி,8.சிங்கார கோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் அய்யலூர் பேரூர்.

**வடமதுரை மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.பாகானத்தம், 2.பிலாத்து, 3. தென்னம்பட்டி, 4. கொசவபட்டி, 5.குளத்தூர், 6.பாடியூர், 7. வேல்வார் கோட்டை, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வடமதுரை பேரூர்.

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.திருக்கூர்ணம், 2.ஆர்.வெள்ளோடு, 3.ஆலம்பாடி, 4.கோட்டானத்தம், 5.தோளிப்பட்டி, 6.கருங்கல், 7.டி.கூடலூர், 8.லந்தகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பாளையம் பேரூர்.

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.புதுக்கோட்டை, 2.ஆர்.கோம்பை, 3. வடுகம்பாடி, 4.வாணிக்கரை, 5.சின்னலுப்பை, 6.உல்லியகோட்டை, 7.மல்லப்புரம், 8.கூம்பூர், 9.கரிக்காலி ஆகிய 9 ஊராட்சிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

# தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி மேற்கு ஒன்றியத்திலிருந்து, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத்திற்குள் வரும் **3 ஊராட்சிகள் சேர்த்து**, **தருமபுரி கிழக்கு**, **தருமபுரி வடக்கு**, **தருமபுரி தெற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு ஆகிய ஒன்றியச் செயலாளர்கள் தொடர்ந்து அப்பொறுப்பு வகிப்பார்கள். புதியதாக பிரிக்கப்பட்ட தருமபுரி தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர் ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **தருமபுரி கிழக்கு**, **தருமபுரி வடக்கு**, **தருமபுரி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்-1.முக்கல்நாயக்கன்பட்டி, 2. நல்லசேன அள்ளி, 3.உங்கரான அள்ளி, 4.நூல அள்ளி, 5.செட்டிக்கரை, 6.கொண்டகரஅள்ளி, 7.திப்பிரெட்டிஅள்ளி, 8.வே.முத்தம்பட்டி, 9.கோடுஅள்ளி ஆகிய 9 ஊராட்சிகள்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்**

செயலாளர் : **கே.பி.சக்திவேல்**
1/60, மாரியம்மன் கோவில் தெரு,
கவலைக்காரன்கொட்டாய்,
அன்னசாகரம் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்- 636 704.

**தருமபுரி வடக்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள்- 1.மூக்கனூர், 2.அக்கமனஅள்ளி, 3. நாயக்கனஅள்ளி, 4.குப்பூர், 5.வெள்ளோலை, 6. கொண்டம்பட்டி, 7.வெள்ளாளப்பட்டி ஆகிய 7 ஊராட்சிகள்.

செயலாளர் : **என்.ஏ.மாது**, எ.நடுப்பட்டி,அக்கண அள்ளி அஞ்சல்,தருமபுரி வட்டம் & மாவட்டம்-636 704.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள் - 1.கே.நடுஅள்ளி, 2. அளேதருமபுரி, 3.செம்மாண்டகுப்பம், 4.ஆண்டிஅள்ளி, 5.கிருஷ்ணாபுரம், 6.புழுதிக்கரை, 7.கோணங்கிநாயக்கன அள்ளி ஆகிய 7 ஊராட்சிகள்.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், சின்னேரி மோட்டுப்பட்டி கிராமம்.புழுதிக்கரை அஞ்சல், தருமபுரி மாவட்டம் -635 202.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.



மறைமலைநகரில் நடைபெற்ற "எல்லோருக்கும் எல்லாம் " திராவிட மாடல் நாயகரின் 71வது பிறந்தநாளை விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மறைமலைநகர் நகர செயலாளர் ஜெ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது.இப்பொதுக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரையாற்றினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட துணை செயலாளர் து.மூர்த்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# காலம் வென்றுதமிழர் நினைவில் வாழும் பேராசான்!

முத்தொளிபோல் சான்றோர்குள்ளே
முதன்மையர் பேராசானே!
வித்தகர்நம் பெரியார்அண்ணா
வினைத்திட்பக் கலைஞரோடே
ஒத்துரிமைகலந்தேஒன்றி
உயிர்த் தமிழ்நம் தமிழ்நாட்டைத்தான்
புத்துணர்ச்சிவெள்ளம்பாய்ச்சி
புதுமைவென்றபேராசானே!

நிறைகுடம்போல் வாழ்வுகண்டார்
நீதிநேர்மைஅறம்போல் வாழ்ந்தார்
மறைநம்மின் திருக்குறட்கே
மறுபதிப்பாய் வாழ்வியல்தேர்
முறையியல்தம் வாழ்வில் கொண்டார்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
இறைஆட்சிக் களங்கள் வெல்ல
இதயம்தந்தார்பேராசானே!

கழகமேதன் உயிர்ப்பாய் மேன்மேல்
கரைகாணாச்சோதனையில்
தழல்மாற்றிக் கலைஞர் தன்னின்
மற்றுமொருஅண்ணாவாக
நிழல்தந்தார் என்றென்றைக்கும்
நீங்காத்தோழமைக்குள் வாழ்ந்தார்!
எழக்கழகமகலைஞர் ஆட்சி
என்றென்றும் துணைக்கோவானார்

அரசியல்வான்போராசானே!
அருந்ததியாய் ஒளிர்ந்தார் அம்மா!
வரம்தவம்போல் கலைஞருக்கோ
வாய்மைதூய்மைநம்பிக்கைக்கே
கரம்தந்தார் இதயம் தந்தார்
காண்பரியமுதல்வர் இஸ்டாலின்
நிரந்தரமாம் ஆட்சிபோற்றி
நிலையாய்வாழ் பேராசானே!



காலங்கள் கடந்தபோதும்
கழகம்தி.மு.க. தான் வாழும்
காலங்கள் தோறும் விஞ்சும்
கலைஞர்தம் மூச்சுக் காற்றாய்
காலங்கள் கடந்தும் ஈடில்
காப்புதமிழ்ப் பேராசான்தான்
காலம்வளர் தமிழாய் ஓங்கி
தமிழர்தம் நினைவில் வாழ்வார்!



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

### பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கில் முதலமைச்சர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, தலைமை! திண்டுக்கல் லியோனி சிறப்புரை ஆற்றி நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, மார்ச். 8

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், எல்லோருக்கும் எல்லாம், திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் (6.3.2024) மாலை 6 மணிக்கு 16 வது வட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை தாங்கினார்.

வட்டச் செயலாளர்கள் இ.கண்ண ப்பன், கே.அங்குசாமி, கே.கருணாகரன், கா. தாமரைச்செல்வன், பி.எஸ்.சந்துரு, வி.ரா.குப்பன் ஆகியோர் வரவேற்றனர்.

பகுதி நிர்வாகிகள் வி. திராவிட வீரன், கா.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கவுரி, ஆர்.முரளி, பி.தரணி , க.காசிநாதன், பி.நிர்மல்குமார், கே.செல்வன்,நா. மோகன்குமார் நாகூரார், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு சிறப்புரை நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நா.சந்திரபாபு, மிசா பா.மதிவாணன், வி.இராமநாதன், அம்முமூர்த்தி, மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி.துரைசாமி, பி.குணசேகரன், துரை தசரதன், முகமது வசீம், அமுதா மணிராஜ், கலைச்செல்வி, சுதா, எஸ்.சுதா, கே.யுவராணி, சரவணன், எஸ். கோபாலகிருஷ்ணன், பா. கோபிநாத், வி.மணிகண்டன், இ.பாஸ்கரன், சி.அருணாசலம், எச்.பீர்முகமது, கே.சேரலாதன், எஸ்.சிவகுமார், பேன்சிரமேஷ், எஸ்.விஜி, கே.சண்முகபிரியன், எம்.என்.அஜய் தென்னவன், விஜயன் யுவராஜ், த.விக்னேஸ்வரன், என்.பிரபு, ராஜன், 16 வது வட்ட நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், கே. ராஜ்மோகன், சி.முத்தையா, வி.மாரி, கே.ஏ.ரமேஷ், சி.உத்திராஜ், 16 வது வட்ட பாக முகவர்கள் வி.ராஜி, ஜி. நித்யானந்தம், எஸ்.வெள்ளைச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் பகுதி துணை செயலாளர் கே .சிவசங்கரன் நன்றி கூறினார்.



கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சைதை கிழக்கு பகுதி 169 அ வட்டம் பேன் பேட்டை அண்ணா சாலை தியாகமரவர் தீனன் நினைவு கொடி கம்பம் அருகில் வட்டக் கழக பொருளாளர் டி. கண்ணன் தலைமையில் கழக கொடி ஏற்றி பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் சென்னை பெருநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் அறுசுவை உணவு இனிப்பு வழங்கினார். இதில் வட்டக் கழக நிர்வாகிகள் முபாக்கியலட்சுமி, சைதை அ.வரதன், சோ.முருகையன். பா.செல்ல பாண்டியன், ரியாஸ் அகமது, எஸ். கரிமுல்லா, சிவபிரகாஷ், அரவிந்தன், ராஜா சம்பத், ஏ.மாரி, நைனா துரை, எஸ்.கே.காதர் ஷெரீப், அருமைநாதன், நிகேஷ், என்.மணிகண்டன், வி.என்.மணிகண்டன், செல்வதுரை, டி.குமார், ஆர்.கவின், ரிஷி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## அரசியலின் மகுடம் - எல்லோர்க்கும் எல்லாம் வேண்டுமென எண்ணும் இதயம் -

# மக்கள் பெருங்கடலின் மகத்தான தலைவர்
# முதல்வர் மு.க.ஸ்டாலின் 71-வது பிறந்த நாள் விழா !





## சென்னை கிழக்கு மாவட்டத்தில் 72 'சூரியச் சுடர்' நிகழ்ச்சிகள் திருத்தப்பட்ட பட்டியல்!
## மார்ச் 8 முதல் 19 வரை நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!
## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**மக்கள் முதல்வரின் மனிதநேயத்திருவிழா**
**பிப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை**
**72 சூரியச்சுடர் நிகழ்ச்சிகள்**

**ஒரு நூற்றாண்டு கால அரசியலின் மகுடம், எல்லோர்க்கும் எல்லாம் வேண்டும் என எண்ணும் இதயம், மக்கள் பெருங்கடலின் மகத்தான தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா.**

**இப்பெருமைமிகு பிறந்தநாள் விழாவை, சென்னை கிழக்கு மாவட்டம் "சூரியச்சுடர் விழா" வாக நலத்திட்டங்கள், கருத்தரங்கம், கவியரங்கம், பொதுக்கூட்டங்கள் என 71 நிகழ்ச்சிகள் நடத்தி கழகத்தலைவரின் புகழுக்கு புகழ் சேர்ப்போம்.**

**இவ்விழாக்களுக்கு திரளாக வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

அன்புடன்
**பி.கே.சேகர்பாபு**
**சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்**
**அமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை**
**மற்றும்**
**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்**

**சூரியச்சுடர் - 55**
**மனதிற்குள் அன்பை நடுபவர்**
**மாநிலத்தின் நிழலாய் விரிபவர்**
நாள்: 08.03.2024, வெள்ளிக்கிழமை, காலை: 08.00 மணி
இடம்: பூங்கா சாலை, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
**தலைமை: ஜி. நாகவள்ளி, எம்.சி.,**
மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்
271 மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைப்பவர்
டாக்டர் மா. மதிவேந்தன்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
அன்புடன்:
88வது வட்ட திமுக
அம்பத்தூர் தெற்கு பகுதி

**சூரியச்சுடர் - 56**
**ஆசான்களிடம் பாடம் கற்றோம்**
**ஆதவனால் விடியல் பெற்றோம்**
நாள்: 08.03.2024, வெள்ளிக்கிழமை, காலை: 10.00 மணி
இடம்: ஆர்.கே.மகால், M.H. ரோடு
**தலைமை: C.ஸ்ரீதணி, மாமன்ற உறுப்பினர்**
171 ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு நலத்திட்ட உதவிகள்
திரு.க.பொன்முடி
கழக துணைப்பொது செயலாளர்
அன்புடன்:
70வது வட்ட திமுக
கொளத்தூர் கிழக்கு பகுதி

**சூரியச்சுடர் - 57**
**கொடுக்கும் முதல்வர் குணம் வாழ்க**
**கொள்கை தலைவர் புகழ் வாழ்க**
நாள்: 08.03.2024, வெள்ளிக்கிழமை, மாலை: 04.00 மணி
இடம்: சிராஜ் மகால், எழும்பூர்
**தலைமை: ராஜேஸ்வரி ஸ்ரீதர், எம்.சி.,**
மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்
72 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், M.P.,
கலை இலக்கிய பகுத்தறிவு பேரவைத்துணைத்தலைவர்
அன்புடன்:
மாவட்ட மகளிர் தொண்டரணி
எழும்பூர் தெற்கு பகுதி

**சூரியச்சுடர் - 58**
**கைகள்யாவும் கதிரோடு இணையும்**
**களம்காணும் இந்தியா எங்குமே வெல்லும் !**
நாள்: 08.03.2024, வெள்ளிக்கிழமை, மாலை: 06.00 மணி
இடம்: ஜி.கே.எம்.காலனி மைதானம்
**தலைமை: எம்.டி.தமிழ்செல்வன்,**
வட்ட செயலாளர்
புகழுரைப்போர்
நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத்
திராவிட இயக்க போர் முரசம்
நடிகர் பொன்வண்ணன்
இயக்குநர் பாண்டியராஜன்
அன்புடன்:
64 அ வட்ட தி.மு.க
கொளத்தூர் மேற்கு பகுதி

**சூரியச்சுடர் - 62 (முன் வைக்கப்பட்டது)**
**வரலாறாய் பயணிக்கும் நெடுந்தொடர்**
**பிறர் வாழ மனதுக்குள் சுமப்பவர்**
நாள்: 09.03.2024, சனிக்கிழமை, காலை: 09.00 மணி
இடம்: ஐசக் தெரு, போஸ்ட் ஆபிஸ் சந்து, சென்ட்ரல்
**தலைமை: டி.சதிஷ்குமார்**
வட்டக் கழகச் செயலாளர்
271 இரயில்வே சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு.மு.சண்முகம், M.P.,
பொதுச் செயலாளர் - தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை
அன்புடன்:
59வது வட்ட திமுக
துறைமுகம் மேற்கு பகுதி

**சூரியச்சுடர் - 59**
**பக்குவம் பெற்ற தலைவர்**
**பகிர்ந்து கொடுக்கும் முதல்வர்**
நாள்: 09.03.2024, சனிக்கிழமை, காலை: 10.00 மணி
இடம்: ஏ.எஸ்.என். சுவர்ணா மகால், நெற்குன்றம்
**தலைமை: S. உமா மாமன்ற உறுப்பினர்**
தனியார் நிறுவன உணவு விநியோகிப்பாளர்கள் 171 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு. இரா.கிரிராஜன், MP.,
கழக சட்டதிட்டக்குழு செயலாளர்
அன்புடன்:
93வது வட்ட திமுக
அம்பத்தூர் தெற்கு பகுதி

**சூரியச்சுடர் - 53 (தள்ளி வைக்கப்பட்டது)**
**அழகுக் கோலம் வரைந்து காட்டுவோம்**
**அன்பு முதல்வரை என்றும் போற்றுவோம்**
நாள்: 09.03.2024, சனிக்கிழமை, மாலை: 04.00 மணி
இடம்: பின்னிமில் மைதானம், புளியந்தோப்பு
**தலைமை: மேயர் பிரியா ராஜன்**
தலைமை செயற்குழு உறுப்பினர்
571 மகளிர்கள் பங்குபெறும்
கோலப்போட்டியை துவக்கி பரிசுகள் வழங்குபவர்
திருமதி.பி.கீதா ஜீவன்
மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
அன்புடன்:
71அ வட்ட திமுக
திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

**சூரியச்சுடர் - 60**
**ஒன்றியத்தின் முதன்மை**
**தமிழ்நிலத்தின் புதுமை**
